பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

விலை ரூபா. 7.00

VALAMPURI

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை (31.08.2004) தொலைபேசி - 2223378 ஒலி 256

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுடன் இணைந்து

# இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிரான

# பிரசாரத்தை முறியடிக்க புலிகள் வியூகம்!

### செய்தியாளர் மத்தியில் சு.ப. தமிழ்ச்செல்வன்


(கிளிநொச்சி)

**தமிழ் தேசியத்திற்கு எதிராகவும் தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பாகவும், தென்னிலங்கையில் செய்யப்பட்டு வரும் பொய்ப்பிரசாரங்களுக்கு ஆப்பு வைக்கும் வகையில் தென்னிலங்கை சமூகத்திற்கு அது தொடர்பான தெளிவான விளக்கங்களை அளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுடனான நேற்றைய சந்திப்பின் பின் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பு சுமார் 4 மணித்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)



## புலிகள் கொழும்புக்கு வருவதைத் தடுக்க ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யவேண்டும்

### பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொழும்புக்குள் வருவதைத் தடுக்கும் விதத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருக்கும் நடமாடும் சுதந்திரம் தொடர்பான பகுதியை மீளாய்வு செய்வது அவசியம் என பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கு தகவல் தருபவர்களும் புலிகளுக்கு எதிரானவர்களும் கொழும்பில் கொலை செய்யப்படுவது நாளாந்தம் அதிகரித்துள்ளது. வடக்கு கிழக்கில் இருந்து பொதுமக்கள் ஏனைய மாகாணங்களில் சுதந்திரமாக ... அதிபர் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்ன

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் இன்று மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

அரச படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் நல்லுறவையும், சந்திப்புக்களையும் ஏற்படுத்தக்கூடிய சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டே இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்கிறார்.

இவர் தனது விஜயத்தின் போது விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்று இராணுவத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கத்துடன் சொல்ஹெய்யர் இன்று பேச்சு

ளார்.

இராணுவத்திற்கு தகவல் தருபவர்களும் புலிகளுக்கு எதிரானவர்களும் கொழும்பில் கொலை செய்யப்படுவது நாளாந்தம் அதிகரித்துள்ளது. வடக்கு கிழக்கில் இருந்து பொதுமக்கள் ஏனைய மாகாணங்களில் சுதந்திரமாக நடமாடமுடிந்தது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரேயாகும். இதனை விடுதலைப் புலிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திவரும் நிலையில் இது தொடர்பான விதிகளில் திருத்தங்கள் செய்யப்படுவது பற்றி கருத்தில் கொள்ளுதல் அவசியம். இவ்வாறு பொலிஸ்மா

# சொல்ஹெய்யர் இன்று பேச்சு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் இன்று லண்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில ஏற்பட்டு வரும் முறுகல் நிலையை தணிக்கும் நோக்குடனேயே இச் சந்திப்பு இடம்பெறுவதாக தெரியவருகின்றது.

இச் சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரும் கலந்து கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சந்திப்பை அடுத்து நோர்வேத் தரப்பினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொழும்பில் சந்தித்துப் பேசலாம் என தெரியவருகின்றது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கருடன், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டேயும் கலந்துகொள்வார் என தெரியவருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் படைத் தரப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள, ஆங்கில ஊடகங்கள் போரை மையமாகக் கொண்டே செயற்படுகின்றன

## தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

இலங்கையில் இருந்து வெளிவரும் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் தமிழர்களுக்கு எதிராகவும், போர் ஒன்றை மையமாகக் கொண்டுமே செயற்பட்டு வருகின்றதாக குற்றஞ்சாட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில், தமிழ மக்களின் அரசியல் உரிமையை மறுக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டுவரும் இவ் ஊடகங்கள் சமாதானத்தை எவ்வாறாயினும் குழப்பவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே செயற்படுகின்றன.

தமிழ் மக்கள் இந் நாட்டில் குடிபெயர்ந்தே வாழுகின்றனர். எனவே, அவர்களுக்கு இந் நாட்டில் எவ்வித உரிமையுமில்லை என்ற வகையில் கருத்துக்களை இந்த ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

இதனை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அத்துடன் விற்பனை நோக்கத்திற்காக இவ்வாறு விசமத்தனமான முறையில் செய்திகளை வெளியிட்டு வருவதை சம்பந்தப்பட்ட ஊடகங்கள் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கொச்சைப்படுத்தி அவர்களின் உரிமைகளை நசுக்கும் சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஊடகங்கள் சாதகமாகச் செயற்படாது நடுநிலைமையுடன் செய்திகளை பிரசுரிக்க வேண்டும் என்றுள்ளது.

(ற-க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை
மாதிரி வினாத்தாள்
சைவசமயம் - II

# இந்திய தூதுவராக நிருபமராவ் நியமனம்

(கொழும்பு)


இலங்கைக்கான புதிய இந்திய உயர் ஸ்தானிகராக நிருபமராவ் நியமிக்கப்பட்டுள்ளார். புதிய உயர் ஸ்தானிகர் நேற்று தனது நியமனப் பத்திரத்தை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரிடம் கையளித்தார்.

இந்தியாவின் வெளிவிவகார நட்வடிக்கையில் 1973 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட அவர் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மொராக்கோவில் கோரவிபத்து 30 பேர் பலி; 40 பேர் படுகாயம்



(ராபட்)

மொராக்கோவிலுள்ள அற்லஸ் மலைப் பாதையில் இடம்பெற்ற பயங்கர விபத்தில் 30பேர் பலியாகியுள்ளதுடன் 40பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மொரோக்கா நாட்டில் உள்ள இருசுற்றுலா தளங்களை இணைக்கும் அற்லஸ் மலைப் பாதையில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்து ஒன்று முன்னால் சென்றுகொண்டிருந்த வேறுஒரு வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டவேளை,

பேருந்து சாரதியின் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து எதிரே வந்துகொண்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியதுடன் லொறியைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த கார்மீதும் மோதியது.

இவ் விபத்தினைத் தொடர்ந்து விபத்துக்குள்ளான வாகனங்கள் மூன்றும் வீதியை விட்டுத் தடம்புரண்டு பள்ளத் தாக்கில் வீழ்ந்தது நொருங்கியது.

இச்சம்பவத்தில் சுற்றுலாப் பயணிகள் 27பேரும் மோதப்பட்ட காரில் இருந்த 3 பேரும் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்தில் காயமடைந்த வர்கள் மொரோக்கா இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கவலை தெரிவித்துள்ள மொரோக்கா நாட்டுமன்னர் முக மது அலி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கவும் முன்வந்துள்ளார்.

(ப)

## புஷ்ஷை மிரட்டியதாக பொலிஸ் அதிகாரி கைது

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ புஷ் கடந்த ஜூலை மாதம் புளோரிடா மாகாணத்திற்குச் சென்றிருந்தவேளை அங்கு வைத்து அவருக்கு இனம்தெரியாதோரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பாக அமெரிக்க பொலிஸ் அதிகாரி ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு சந்தேகத்தின்பேரில் கைதானவரது குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 5ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 1கோடி அமெரிக்க டொலர் தண்டப்பணமும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சந்தேகத்தை உறுதி செய்யும் நடவடிக்கையில் அமெரிக்க அரசாங்கம் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது.

(ப)

## குற்றவாளிகளை ஒப்படைக்க ஒப்பந்தம்: இந்தியாவின் யோசனைகளை பாகிஸ்தான் நிராகரித்தது

(இஸ்லாமபாத்)

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளில் குற்றங்களைச் செய்துவிட்டு தப்பிவிடும் குற்றவாளிகள் சிக்கினால் பரஸ்பரம் ஒப்படைக்க ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளலாம் என்று இந்தியா தெரிவித்த யோசனையை ஏற்க பரிகிஸ்தான் நிராகரித்துவிட்டது.

மன்மோகன்சிங் தலைமையில் புதிய கூட்டணி அரசு பதவியேற்ற பிறகு,பாகிஸ்தான் உள்துறைச் செயலர் தாரிக் முகமது தலைமையிலான குழுவுடன் இந்திய உள்துறைச் செலயர் தீரேந்திர சிங் தலைமையிலான குழு, இம் மாதம் இஸ்லாமபாத்திற்குச் சென்று பாகிஸ்தான் அரசு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தத்தை செய்துகொள்ளலாம் என்று இந்திய அதிகாரிகள் யோசனை தெரிவித்தனர்.

எனினும் அதற்கான காலம் இன்னும் கனியவில்லை என்று பாகிஸ்தான் அதிக்ாரிகள் மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

குண்டு வெடிப்பு மூலம் ஏராளமானோரைக் கொன்ற தீவிரவாதிகள் 25பேர் பாகிஸ்தானில் வசிப்பதாக இந்தியத் தரப்பில் தொடர்ந்தும் கூறப்படுகிறது.

(ப)

## பிரான்ஸில் கார்~பஸ் விபத்து 8பேர் பலி; 46பேர் படுகாயம்

(பரிஸ்)

பிரான்ஸின் தென்கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற கார்- பஸ் விபத்தில் 8 பேர் பலியாகியுள்ளதுடன் 46 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பிரான்ஸிலுள்ள பிலின் நகரின் அதிவேக நெடுஞ்சாலை ஒன்றில் இடம்பெற்ற இவ்விபத்தினைத் தொடர்ந்து விபத்துக்குள்ளான வாகனத்தைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த வாகனங்கள் ஒன்றை ஒன்று முட்டிக்கொண்டதில் 20ற்கும் மேற்பட்ட கார்கள் சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்தினையடுத்து, இடம்பெற்றவிருந்த அனர்த்தங்களைத் தடுப்பதற்காக 130 தீயணைக்கும் படையினர் அவ் விடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

அண்மைக்காலமாக பிரான்ஸில் உள்ள அதிவேக நெடுஞ்சாலைகளில் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமைக்கு ஓட்டுநர்களின் கவன இன்மையே காரணம் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

(ப)

## WORLD NEWS உலக தரிசனம்

## ஆப்கானில் குண்டுத்தாக்குதல்: 5 சர்வதேச பொலிஸார் மரணம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் உள்ள சர்வதேச பொலிஸ் நிலையத்திற்கு அருகே குண்டொன்று வெடித்ததில் சர்வதேச பொலிஸ் படையைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர்

காரிலிருந்து நடத்தப்பட்டுள்ள இக் குண்டுத் தாக்குதலை தலிபான்களே நடத்தியிருப்பதாக ஆப்கானி ஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்

எனினும் இத்தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை என்

## பள்ளிக்கூடத்தில் குண்டுவெடிப்பு 9 குழந்தைகள் உட்பட 10பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஒரு பள்ளிக்கூடத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் 9 குழந்தைகள் உள்பட10 பேர் பலியாகியுள்ளனர்.

காபூல் நகரின் தெற்குப் பகுதியில் 130 கிலோ மீற்றர் தொலைவில் பக்தி மாகாணம் உள்ளது. ஜோர்மாட் என்கிற இடத்திற்கு அருகே இந்தக் குண்டு வெடிப்பு நடந்தது. இதில்30 குழந்தைகளும் 3 பெரியவர்களும் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இராணுவத்தினரின் உதவியுடன் அதிகாரிகள் இந்தக் குண்டுவெடிப்பிற்கு காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடத்திவருகின்றனர்.

வாதிகள் அரசு ஆட்சி செய்து வந்தது. ஆனால் அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் தீவிரவாதிகள் மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்தியது. இதனால் தலிபான் தீவிரவாதிகள் ஆட்சி இழந்தனர்.

இருப்பினும் ஆப்கானிஸ்தானில் பதவி வகிக்கும் புதிய அரசுக்கு பாதுகாப்பளிக்கும் பொருட்டு அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கில் தலிபான் தீவிரவாதிகளுக்கும், ஆப்கானிஸ்தான். அமெரிக்க இராணுவ வீரர்களுக்கும் இடையே அடிக்கடி சண்டை நடை பெற்று வருகிறது. இதில் அப்பாவி மக்கள் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் உள்ள சர்வதேச பொலிஸ் நிலையத்திற்கு அருகே குண்டொன்று வெடித்ததில் சர்வதேச பொலிஸ் படையைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர்

காரிலிருந்து நடத்தப்பட்டுள்ள இக் குண்டுத் தாக்குதலை தலிபான்களே நடத்தியிருப்பதாக ஆப்கானி ஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்

எனினும் இத்தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டுவெ்டிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த 5 பொலிஸாரில் 3 பேர் அமெரிக்கர் எனவும், ஏனைய இருவரும் ஆப்கானிஸ்தானியர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தற்பொழுது தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ப)



பிரிட்டிஷ் நாட்டின் எடின்பரோ நகரில் கடந்த சனிக்கிழமை நடந்த "பணமா படிப்பா" என்ற சிறப்பு விவாத நிகழ்சியில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அழகி மோனிக்கா லெவின்ஸ்கி கலந்துகொண்டார்.

காபூல் நகரின் தெற்குப் பகுதியில் 150 கிலோ மீற்றர் தொலைவில் பக்தி மாகாணம் உள்ளது. ஜோர்மாட் என்கிற இடத்திற்கு அருகே இந்தக் குண்டு வெடிப்பு நடந்தது. இதில்30 குழந்தைகளும் 3 பெரியவர்களும் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இராணுவத்தினரின் உதவியுடன் அதிகாரிகள் இந்தக் குண்டுவெடிப்பிற்கு காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடத்திவருகின்றனர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிர இழந்தனர்.

இருப்பினும் ஆப்கானிஸ்தானில் பதவி வகிக்கும் புதிய அரசுக்கு பாதுகாப்பளிக்கும் பொருட்டு அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கில் தலிபான் தீவிரவாதிகளுக்கும், ஆப்கானிஸ்தான். அமெரிக்க இராணுவ வீரர்களுக்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெற்று வருகிறது. இதில் அப்பாவி மக்கள் பலியாகி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

# புஷ்ஷின் நிர்வாகத்தை எதிர்த்து நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டம்




அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் ஏகாதிபத்தியக் கொள்கைகளை எதிர்த்தும் அமெரிக்கா ஈராக் மீது நடத்திய தாக்குதல்களைக் கண்டித்தும் ஆயிரக்கணக்கானோர் கூடி நியூயோர்க் தலைநகரில் நேற்று ஆர்ப்பாட்டப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்க அதிபர் புஷ்ஷின் கட்சியான குடியரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெறவுள்ளதனால் அதனைக் குழப்பும்நோக்கில் சமாதானத்திற்கும் நீதிக்குமான ஐக்கிய கூட்டணி என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இவ் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

புஷ்ஷின் ஆட்சி இனிமேலும் தொடரக்கூடாது எனவும் அவரது அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் எனவும் கோஷங்களை எழுப்பியவாறு நியூயோர்க் நகரில் பல்லாயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வியாழனிலிருந்து வெவ்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக நகரில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இவ்வாறான ஆர்ப்பாட்டங்களின் போது கலகம் விளைவிக்க முனைந்தோரில் 200 இற்கும் மேற்பட்டோர் அமெரிக்கப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகத்திற்கு எழுந்துள்ள எதிர்ப்புகள் காரணமாக அவர் இம்முறை தேர்தலில் தோல்வியைத் தழுவக்கூடியநிலை தோன்றியிருப்பதாக அந்நாட்டு அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (ப)



# வியாழ மாற்றம்

(நேற்றைய தொடர்ச்சி)

## தனுசு



**24.03.2005 முதல் 07.05.2005 வரை**

சிலருக்கு எழுத்து வகையிலும் பாதிப்பு உண்டாக்கவல்லது. உறவினர் மூலம் சிலசமயம் வாக்குவாதம் உண்டாகும்.உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலக சூழ்நிலை ஒரேசீராக இருக்காது. மேல்நிலை ஊழியர்கள் முதல் கீழ்நிலை ஊழியர்களும் இணக்கமான போக்கில் இருக்க மாட்டார்கள். குழந்தைகள ஆரோக்கியம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் பெரியவர்களுக்கு மருத்துவச் செலவும் இடம்பெறும். குரு,சனி, புதன் தான் இந்தக் கோள்கள் உங்களுக்குத் தீமை செய்யாதவர்கள் இல்லை. உறவு நன்றாக இருப்பதாகக் கொள்ள முடியாது. பிணக்குத் தோன்றத்தான் செய்யும். பெண்கள் மூலம் சில கௌரவக் குறைவான பேச்சும் கூட உண்டாகும். உறவினர் போக்கு ஒருவழிப் பாதை போன்றது.

நீங்கள் அவர்கள் மூலம் எந்த நன்மையையும் எதிர்பார்க்க முடியாது. வழக்கு,கடன் பிரச்சினைகளும் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். சத்துருக்கள் பலம் படிப்படியே குறைந்து வருவதாக இருக்கிறது. குடும்ப உறவில் நடக்கும் சுப விசேடங்களில் கலந்து கொள்வது விருந்துண்பது போன்ற நன்மைகள் இருக்கும். மாணவ, மாணவிகளுக்கு தேர்வில் வெற்றியுண்டு. ஆனால் மதிப்பெண் எடுப்பது தான் குறைவாக இருக்கும்.நேராக இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் :3, 7, 4.**
**அனுகூலத்திக்குகள்: வடமேற்கு, கிழக்கு.**

**07.05.2005 முதல் 20.06.2005வரை**

குடும்ப உறவல் நடக்கும் விசேடங்களில் கலந்து கொள்வதும் விருந்துண்பதும் உண்டாகும். பிரயாணத்தினால பெருத்த ஆதாயம் இல்லை. என்றாலும் குறிப்பிட்ட நன்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. தொழில் கூட்டு முயற்சி இப்போது தான் உருவகத்திற்கு வந்துள்ளன.சற்று வேகமாகப் போங்கள் வெற்றி உங்களை நெருங்குகிறது.எதிலும் தயக்கம் இல்லா மல் செயறபடவும். உங்கள் செயலுக்கும் சொல்லுக்கும் சோர்வின்றி நடந்து செல்வீர்கள். மங்கியிருந்த மதியூகம புதுமை பலம் பெற்று விளங்கும்.மற்றவர் உங்கள் புறம்வரும் காலமிது. மானதே.சகோதர,சகோதரி வகையினர் முன்னேற்றம் மகிழ்ச்சிக்குரியதே.மலைவளம் சூழ்பிரதேச மனிதர்களைச் சந்திப்பதும் உண்டாகும். மேல்அதிகாரிகள் மூலம் பாராட்டும் பரிந்துரைகளும் இல்லாமல் இல்லை. குடும்பநிலை திருப்தியானதே.

**அதிர்ஷ்ட எண்கள் :2, 8, 11**
**அனுகூலத்திக்கு: வடக்கு.**

**20.06.2005 முதல் 03.08.2005 வரை**

தொழில்வழி வேலைகள் மட்டுமல்லாமல்.குடும்பத்து வேலைகளும் ஒன்று சேர்ந்து விட்டன.பிரயாணம் ஏற்பது திருமணம் குறித்ததாகவும் இருக்கலாம்.கட்டுமாணவேலைகளை முடிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.நண்பர்களும் உறவினர்களும் ஒன்றுசேருவர்.விருந்து வேடிக்கை நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. குழந்தைகள் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இந்த ராசி உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி மாற்றம் உத்தரவை எதிர்பார்க்கவும். கடன், வழக்குப் போன்றவைகள் கட்டுப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. அந்நிய இனத்தவரை சேர்த்து குடும்பமாக்கும் சில புதிய முயற்சி இடம்பெறும். தூரத்தில் இருந்த உறவினர் நெருக்கமாக வந்துவிடுவர்.புத்திரர் அல்லது புத்திரியர் திருணம் முடிவுபெறும். விருந்துணபதும் இருக்கும்.இரண்டில் இருக்கும் ராகு நீங்கள் திருமணம் ஏற்பவராக இருந்தால் அவை நேரான திருமணமாக இருக்குமா என்பது கேள்வியாக இருக்கும்.புதுஉடைகள் சேர்க்கை, நிலம், வெள்ளைக் கற்களுடைய ஆபரணங்கள் சேர்க்கையைப் பெறுவீர்கள். கலைப் பிரிவு ஆண்,பெண்களுக்க உருவாகிவருவதை உணரலாம். தேங்கியிருந்த தனம் வந்து சேரும். குடும்பத் தேவைகளும் படிப்படியே பூர்த்தியாகி வரும். குடும்பத்துடன் சேர்ந்து மற்றவர் வீட்டு விசேடங்களில் கலந்து கொள்வது வேடிக்கை நிகழ்ச்சிகளை அனுபவித்தலும் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் உண்டு. கணவன்,மனைவி முயற்சிகளில் திருப்தியாக சேர்ந்து வரும் கலைப் பிரிவு மனிதர்களுக்கு புதியமனிதர் சந்திப்பு புதிய அனுபவங்களும் உண்டாகும். உங்கள் நேர்மைக்கு பரிசு உண்டு. நீங்கள் செய்யும் அதிகமான முயற்சிகளும் இம் மாதம் நற்பலனையே உண்டாக்கும்.தொழில் வழியல் உங்கள் நேர்மையான செயலால் இழக்க இருந்த பெரும் தொகை மீட்கப்பட்டுவிடும் என்பதுதான். பாிசு, கூட்டு மனிதர்கள் முதல் உங்களுக்குத் தக்கமரியாதை கொடுக்கத் தவறமாட்டார்கள். அடிக்கடி விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் இருக்கும். கூட்டு மனிதர்களின் ஒத்துழைப்பு மனத்திருப்தியளிப்பதாக இருக்கும். அயல்நாட்டு மனிதர்களின் சந்திப்பு அவசரப் பிரச்சினையைத் தீர்க்கும். நீச்சப் பொருள்,தோல்,மீன் சம்பந்தமான நீசவகைகள் ஏற்றுமிதி அல்லது இதர வகையில் பயன்படுத்தப்படுவதால கணிசமான ஆதாயத்தை கொடுக்க வல்லது இநத ராகு. கலைத்துறையில் உள்ளவர்களுக்கும் இப்படி ஒரு பெரிய வாய்ப்பு இருப்பதை உணர்ந்து செயற்படுவது நல்லது. கடன்,வழக்குப் போன்றவைகள் கடுமையாக இருக்க மார்க்கமில்லை. கணவன்,மனைவி உறவும் கவர்ச்சி மிக்கதே. குடும்ப முன்னணி

# உங்களுக்கு எப்படி?

என்பதை மறக்கவேண்டாம். பண வரவு, பழைய கடன்கள் வசூல் ஆவது, புதிய மனிதர்கள் சந்திப்பு போன்றவைகள் இருக்கின்றன. குரு இப்போது உங்களுக்கு எல்லாவழியிலும் நன்மை செய்பவனாக இருக்கிறான் என்பது குறிப்பிடத்தக்கது. கணவன்,மனைவி உறவு கனவு கொண்டதாக இருக்கும் குழந்தைகள் ஆரோக்கியம் திருப்தியானதே. சொத்து சம்பந்தமான விசயத்தில் உங்கள் முயற்சி காலம் கடந்ததாக இருக்கும்.இதனால் சிலருக்கு வழக்குத் திருப்பம் திருப்தியற்றதாக இருக்கும. சனி குடும்ப வகையில் சிறு இடைவழியை வைத்திருக்கிறது. கவனித்துச் செயற படவும். உத்தியோகப் பிரிவினருக்கும் பதவி உயர்வு இப்போது இல்லை.

வேடிக்கைப் பேச்சும் செயலும் சில எதிர்பாராத சிக்கலை உருவாக்கும். எச்சரிக்கை உங்கள் எழுத்துப் பேச்சுக்களே உங்களுக்கு எதிரியாக அமையக்கூடும். கலைப் பிரிவு மனிதர்கள் வார்த்தையை அளவிட்டுப் பேசவும். நீங்கள் எதை நினைக்கிறீர்கள் என்பதை அறிந்து அதை உடனே செயல்படுத்த முடியாது. வாக்குறிதி கொடுத்து சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாம். புதுவழக்கும் தோன்ற வாய்ப்பு இருக்கிறது. மனிதர்களின் கலகம் தொடர்ந்து சிக்கலாகவே இருக்கும். சுப விசயம் குறித்து கடிதங்கள் திருப்தியாகவரும். ஆனால் பணநெருக்கடி பற்றாக்குறையினால் முடிக்க வேண்டிய வேலைகள் நீண்டு கொண்டேபோகும்.நீங்கள் புதிய நண்பர்களையும் புதிய அறிமுகத்தையும் பெறுவீர்கள். பூர்வீக அல்லது இதரச் சொத்துக்களை விற்பது அல்லது மாற்றியமைப்பது உண்டா கும். புண்ணிய ஸ்தல வழிபாடும்,பிரயாணமும் சிலருக்கு அம்சமாக இருக்கும். போட்டி, பந்தையம்,சூதாட்டம் போன்றவழிகள் வெளிச்சமாக சொத்துக்கள் வகையில் இருந்த பிடிப்பான போக்கை உறவினர் மூலம் தீர்த்துக்கொள்ளும் காலம். குடும்பத்தில் உறவினர் வகையில் இருந்து வந்த நெருக்கம் அகற்றப்படும். புண்ணியஸ்தலப் பிரயாணம் தெய்வ வழிபாடும்.மனதிற்குத் திருப்தியான போக்கை உண்டாக்கும். குடும்பத்துடன் பிரயாணமும் ஏற்றவேண்டியிருக்கிறது. இதற்கிடையில் உறவினர் வகையில் வழக்கு வகை இருப்பின் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். குழந்தைகள் வகையில் கணக்கு.வகையினை கவனித்து செயலபடுவது அவசியம். கூட்டு மனிதர்களிடம் கருத்து வேற்றுமைக்கு இடமளிக்காமல் பார்த்துக்கொள்ளவும்.உங்கள் பிரச்சினைகள் முழுவதும் தீக்கப்படவல்லை என்பது உண்மைதான். ஆனால் நீங்கள் ஆக்கரீதியில் வளர்ச்சி பெற்றுத்தான் இருக்கிறீர்கள்.கடன் இருக்கிறதே என பயப்பட வேண்டாம். தொழில் வளர்ச்சிக்கு இதுமுக்கியம் தான்.ஜனன கால திசை நன்றாக இருப்பின் பதவி உய்ர்வும் உண்டாகும். கட்டட மனை வாங்குவதும், கட்டிடம் கட்டுவதும் குறிப்பிடத்தககது. நல்லதூக்கம் நல்லுணவு கொள்வது ஆரோக்கியத் தெளிவும் உண்டாகும். இப்போது உங்கள் அவசர தேவைகள் எல்லாம் உடனுக்குடன் பூர்த்தியாகிவிட்டது. திடீர் பிரயாணம் உள்ள காலமிது. சிலர் தேடிக்கொண்டுபோன நேரத்தில் கிடைக்கவில்லை.ஆனால் இப்போது அவர்களே உஙகளைத் தேடிவருவர்.

நீங்கள் இப்போது புதுப் புது நண்பரைச் சந்திப்பீர்கள்.அவர்களால் உபகாரம் இருக்கின்றன.சிலருக்கு இட மாறுதல் உத்தரவோடு பதவி உயர்வும் வரக்கூடும் புண்ணிய ஸ்தல தரிசனமும் உண்டாக்கும்.உறவினர் போக்கு இணக்கமாகும் இதே பலன்களே. தொழில் சமபந்தப்பட்ட முக்கியஸ்தர்கள் சிலா உங்கள் உதவியை நாடவேண்டியிருக்கும். பெரிய இயந்திர ஸ்தாபனம் அமைத்தல்,பெரும்தளம் முதலீட்டுக்கு வேண்டிய ஆதாயத்தைப் பெறுவதும் உண்டாகும். இப்போது அரசாங்க மனிதர்களுடன் இணக்கமான போக்கில் இருப்பதால் உங்கள் திட்டங்கள் வெற்றி பெறுவது வெகுதூரத்தில் இல்லை.மேலும் மகிழ்ச்சியான போக்கு இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம் மட்டும் இடையிடையே செலவுகளைக் கொடுப்பதாக இருக்கும்.முக்கிய பிரயாணங்களும் இருக்கின்றன.மேலும் இப்போது பெண்கள் மூலம் தொழில்வழி ஆதாயத்தை எதிர்பார்க்கலாம் கடன், வழக்குப் போன்றவை பாதிப்புக் கொடுக்க மார்க்கமில்லை. உத்தி யோப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி உயர்வு இருக்கிறது.

தொழில் வகையில் சற்றுத்தொய்வு ஏற்படக்கூடியது எனவே முன்னெச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. முன்னேற்பாடு செய்யப்பட்ட பிரயாணம் ரத்துச் செய்வதும் உண்டாகி பிற்பகுதியில் பிரயாணம் செய்ய வேண்டிவரும்.குழந்தைகள் சுகவிருத்தியைப் பிரதானமாகக் கவனிக்க வேண்டிய காலமாகும். மருத்துவச் செலவுகள் எதிபாராமல் ஏற்படக்கூடியது. உத்தியோகத் துறையினருக்கு ஒரேசீரான போக்கு இருக்கிறது. தனநிலை மட்டும் மந்தமாக இருக்கும்.கலைப் பிரிவினருக்கு எவ்வளவு முயற்சி இருந்த போதிலும் சில காரியங்களை முடிக்க முடியாமல் சிரமப் படவேண்டியிருக்கும். கணவன் மனைவி உறவு கண்ணியமாக அமைந்திருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் :6, 3, 8**
**அனுகூலத்திக்கு: மேற்கு**

**03.08.2005 முதல் 15.09.2005 வரை**

தொழில்வழியில் படிப்படியாக பழைய நிலைக்கு கொண்டுவரும் வாய்ப்பையைக் கவனிக்கவும் தறவமாட்டீர்கள். அரசாங்க உயர்மட்ட அதிகாரிகளின் அரவணைப்பு உங்களுக்கு தொழிலில் பெரிய வெற்றியை உண்டாக்கும். நாகரிக வாகனம், இயந்திரக் கருவிகள் வாங்குவது மிகமுக்கியமாக இருக்கும்.புகழ் மிக்க புண்ணிய ஸ்தலம் சென்றுவருதலும் உண்டாகும். கடன், வழக்குப் போன்றவைகள் வேகமில்லை.

செய்தொழில்வழியை சிறப்பிக்க உங்கள் அலைச்சல் நியாயமானதாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவழிகளில் சிறு சிறு நன்மைகள் இக்கால மத்தியிலிலுந்து இருக்கும். வெளியூர் கடிதங்கள் சுப விசயங்களைத் தாங்கிவரும். கடன் பிரச்சனைகளும் வழக்கு விவகாரமும் மந்தமாகிவிட்டன. உத்தியோகப் பிரிவு ஆண்,பெண்களுக்கு உங்கள் இடம மாறுதல்,இலாகாமாறுதல் சம்பந்தமான பிரச்சனைகள் உடனே தீர்வு காண முடியாது. சில எழுத்து ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. மேல்மட்ட மனிதர்கள் சுமுகமாக இருப்பர்.எல்லா வகையிலும் திருப்தியான சூழ்நிலையே இருந்துவரும். உங்களைக் குறைகூறியவர்கள் இப்போது உங்களைப் பின் தொடரும்காலம். உங்கள வேகமான செயல்கள் மற்றவரைப் பொறாமை அடையச் செய்யும் என்றாலும உங்கள் காரியங்கள் எதுவும் தடைப் படாது. மூதாதேயர் பெற்றபொருளை விற்பனை செய்வதும்.சிலமாற்றமும் அவசியமாகும்.உங்கள் கடன் வழக்குப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

**அதிர்ஷ்ட எண்கள் :4, 6, 7.**
**அனுகூலத்திக்கு: வடக்கு.**

(தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# வியப்பு

ஒரு நண்பர் அவசரமாக என்னிடம் ஓடிவந்தார். அவா சொன்னார் ''என்னால் நம்பவே முடியவில்லை சார் என்மகனா இப்படி?'' என்று ஆச்சரியப்பட்டார். "உங்கள் பையன் அப்படி என்ன செய்துவிட்டான்?'' என்று கேட்டேன்." என்னால் இயலாத காரியத்தை அவன் செய்து விடடான் சார்" என்றார். "அது என்னவென்று கூறுங்களேன்"என்றேன். ''ஐந்தாவது வகுப்பில் அவன ஒரே முயைில் தேறிவிட்டான் சார்'' என்றாா மூச்சு வாங்க. கஷ்டப்பட்டு பரீட்சை எழுதியது அவன். இவருக்கு ஏன் மூச்சுவாங்குகிறது.

நம்மால் செய்ய முடியாத ஒரு காரியத்தை இன்னு மொருவர் செய்யும்போது அது நமக்கு ஆச்சரியம. ஏனென்றால் அது நம்மால் முடியாத காரியம். நம்மால முடியாத ஒன்றைப் பிறர் எளிதாகச் செய்யுமபோது நாம் மருள்வது இயற்கை. இதைத தான் தொல்காப் பியம் மருட்கை என்று சொல்கிறது.

இந்த வியப்பு இருக்கிறதே இது நான்கு வகையில ஏற்படுவதாகத் தொல்காப்பியம் கூறுகிறது. அது என்ன நான்கு வகை. முதல் வகை எப்படியென்றால் புதுமை யான அரிய செயல்களைச் செய்வது. இரண்டாவது வகை பெரும் செயல்களைச் செய்வது. மூன்றாவது வகை மிக நுட்பமான செயுல்களைச் செய்வது. நான்காவது வகை ஆக்கம் தரும் செயல்களைச் செய்வது.

''புதுமை,பெருமை
சிறுமை ஆக்க மொடு
மதினம் சாலா
மருட்கை நான்கே''

தொல்காப்பியம்

இன்று விஞ்ஞானம் புதிதுபுதிதாக எவற்றையோ கண்டுபிடித்துள்ளது. ஆரம்பத்தில் அது ஆச்சரியமாக உள்ளது. அதன்பின் அது நமக்குப் பழகிப்போய் விடுகிறது.வானொலிப்பெட்டி புதிதாக வந்தபோது ஒரு பெட்டி பேசுகிறது என்பது ஆச சரியமான விடயமாக இருந்தது. இப்போது யாரும் அவ்வளவு ஆச்சரியமாக அதைப் பார்ப்பதில்லை.

"மதினம் சாலா மருட்கை என்று ஒரு சொற்றொடா வருகின்றதல்லவா? அதில் கருத்தாழம் உள் ளது. எதைப் பற்றியும் போதுமான அளவு புரிந்து கொள்ளாத போது ஒருவர் ஆச்சரியப்படுகிறாா. புரிந்து கொண்டபின்பு ஆச்சரியம் மறைந்து விடும்.

மிக நுட்பமான செயல்களும் நமமை ஆச்சரியப்பட வைக்கும். ஒரு அரிசியில் ஒரு திருக்குறளை எழுதிக்காட்டுகிறார்கள். ஒரு முட்டை ஓட்டிற்குள் ஓவியம் தீட்டிக்காட்டுகிறார்கள். கருங்கல் சிற்பங்களில் எவ்வளவு நுட்பமான வேலைப் பாடு களை யெல்லாம் பார்த்து ஆச்சரியப் படுகிறோம்.

இதுபோலவே, ஆக்கபூர்வமான அரிய செயல்களைச செய்வது கூட வியப்பை உண்டு செய்யும் குப்பை கூளங் களைக் கூட வாழ்க்கைககுப் பயன்படும் பொருளாக மாற்றுகின்றர்கள் இருக்கின்றனர். அவர்களுடைய செயல வியப்பை அளிக்கிறது.

இடைக்காட்டுச் சித்தர் பாடிய மூவடிமுப்பது என்ற நூலில் வரும் ஒரு பாடல் இது.

''ஆற்றல் பிறர் அறிதலின்
அகம் கிளர்வு உறுதலின்
கற்று அறி பாணர்
கெழுமிய கோடலின்
தோற்றம் உறுகவே
போற்றல் சால் வியப்பே''

ஒருத்தருடைய ஆற்றல் தெரியாமல் இருந்தது. அவருடைய அரிய செயலைப் பார்க்கும் போது வியப்பாக இருந்தது. மனதுக்குள்ளே கிளர்ச்சி. பாவலர்கள் இவர்கள் புகழைப் பாடி மற்றவர்களும் "தெரிந்துகொள்ளுமாறு செய் கிறார்கள். ஆக எல்லா வகையிலும் மக்கள் தங்களுடைய வாழ்க் கையில் முன்னேற வழிகாட் டும் ஒரு மெய்ப்பாடு தான் வியப்பு என்பது.

இந்தக் காலத்தில் நம்மை எப்படி எப்படி யெல்லாமோ ஆச்சரியப்பட வைக்கும் மனி தர்கள் இருக்கின்றனர்.

ஒரு ஆளைப் பிடித்து ஜெயிலுக்குக் கொண்டு வந்தனர். ஜெயில் அதிகாரி அவனை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார். இவன் கேட்டான் "ஏன் சார் அப்படிப் பார்க்கிறீர்கள்? நான் இப்போது இங்கே வருவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கி றதா?'' என்று கேட்டான். இதற்கு ஜெயில் அதிகாரி சொன்னார்.''நீ இப்போது இங்கே வந்ததில் எனக்கு ஒன்றும் ஆச்சரியமில்லை. ஏற்கனவே நீ இங்கே யிருந்து விடுதலையாகிப் போய் ஆறுமாதம் ஆகி விட்டது. இவ்வளவு தாமதமாக இங்கு வருகி றாயே... அதுதான் எனக்கு ஆச்சரியம்'' என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நாட்டில் மீண்டும் யுத்தம் தோன்றும் அபாயம் இல்லை

## க.கா. குழு பிரதித்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படும் வாய்பில்லை யென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹெக்ரப் ஹொக்லன்ட் தெரிவித் துள்ளார்.

வடக்கு- கிழக்கு மாகானத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் ,

யுத்தநிறுத்த ஒப்பந்தம் முடிவடைந்து போவ தற்கோ அதன் மூலம் நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கோ வாய்ப்புகள் இல்லை.

குறிப்பாக, வடக்கு- கிழக்கு மாகாணத்தில் விடுதலைப புலிகளுககும் அரசுக்கும் இடையில் மோதல ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, திருகோணமலைத் துறைமுகத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின பதுங்கு குழிகள் தொடர்பான விபரங்களை கண்கா ணிப்புக்குழு கோரியுள்ளது.

இதேசமயம் இராணுவம் திருகோணமலைத் துறை முகததிற்கு அருகில் விடுதலைப்புலிகளின் பதுங்கு குழிகள இருப்பதாக கூறி வரும் குற்றச்சாட்டை விடு தலைப்புலிகள் நிராகரித்துள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றத்தை மேற்கொள்வது குறித்த நடவடிக்கைகளை கண்காணிப்புச் குழு தொடர்நதும் செய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-க)

# சம்பள உயர்வு வழங்கப்படாமைக்குரிய காரணங்களை அரசு விளக்கவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தபடி அரச ஊழியர் களுக்கு 70 சதவீத சம்பள உயர்வினை வழங்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் சம்பள உயர்வு வழங்க முடியாதி ருக்கும் விடயம் குறித்துப் பொதுமக்களுக்கு பகிரங்க அறிக்கை விடுமாறு கடந்த வார அமைச் சரவைக் கூட்டத்தில் ஏனைய அங்கத்தவர்கள் நிதி அமைச்சர் சரத் அமுனுகமவிற்கு அழுத்தம் பிரயோ கித்துள்ளனர்.

இருப்பினும் நிதி அமைச்சர் இது தொடர்பில் எந்தவித அறிக்கையும் விடுக்கவில்லை. இதனால் ஏனைய அமைச்சரவை உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது .70சதவீத சம்பள உயர்வினை வழங்க முடியாது என்பதை விளங கிக் கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச் சர்க ளான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே,அனுரகு மார திஸநாயக்க, கே.டி.லால்காந்த ஆகியோர் அரசின் நிலை மையை மக்களுக்கு விளக்க வேண்டுமென்று கூறியுள்ளனர்.

சம்பள உயர்வு வழங்கப்பட முடியாதுபோனால், பெரு மளவில் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் இறங் கும் நிலைமை ஏற்படக்கூடும். அதிகரித்த வாழ்க்கைச் செலவும் அச்சுறுத்தலாக உள்ளது.

எனவே சம்பள உயர்வு வழங்க முடியாது போனால் அதிலுள்ள சிக்கல்களை பொதுமக்களுக்கு விளக்க வேண்டும் எனப் பிரதமர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜே.வி.பி.அமைச்சரும் கட்சியின் தொழிற் சங்க ஒன்றியத் தலைவருமான லால்காந்த, திஸ்ஸ தேவேநதிர சம்பள மீளாய்வு சிபார்சுகள் பற்றிய அறிககை இன்னமும் தயாரிக்கப்படாதிருப்பதால் சம்பள முரண் பாடுகளைக் கண்காணிப்பதற்கு தீவிர நவடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ற-

## இராசி பலன்

31.08.2004 (*ஆவணி 15, செவ்வாய்க்கிழமை*)

பிரதமை முற்பகல் 07.37 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 9.17 மணிவரை

இராகுகாலம் 3.05 - 4.35 மணிவரை

சுபநேரம் 10.35 - 12.05 மணிவரை

**மேடம்**
காரிய அலைச்சல், பணவிரயம், பிறருக்கு உதவி செய்தல், மனச்சோர்வு.

**இடபம்**
தனதானிய சேர்க்கை, மாதர் நட்பு, காரிய அனுகூலம், தொழில் வருமானம்.

**மிதுனம்**
எடுத்த காரியம் கைகூடும், ஆரோக்கியமான நிலை, விருந்துபசாரம், அதிகாரம்.

**கடகம்**
பொருள் விரயம், வேலைப்பளு, புத்திரரால் கவலை, காரிய தாமதம்.

**சிங்கம்**
அஜரணக் கோளாறு, பிரயாண பயம், எதிர்பா ராத அச்சம், முயற்சி தடங்கல்.

**கன்னி**
களஸ்திர நன்மை, நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம், பெருமையடைதல்.

**துலாம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், பண வருவாய், தொழில் விருத்தி.

**விருச்சிகம்**
மனக்கவலை, வயிற்றுக்கோளாறு, பணத்தட்டுப் பாடு, முயற்சி தாமதம்.

**தனுசு**
தன்னம்பிக்கைக் குறைவு, புதிய விடயம், முயற்சி தாமதம், ரோக நிலை.

**மகரம்**
நற்கர்த்தி, சித்த சௌக்கியம், போசனசுகம், நல்ல காரியம்.

**கும்பம்**
மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, அதிக செலவு, முயற்சி தாமதம்.

**மீனம்**
வெகுமானம், சயனசுகம், தெய்வசிந்தை, நல்ல முயற்சி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# புலிகள் -முஸ்லிம் பிரதிநிதிகள் அம்பாறையில் சந்தித்துப் பேச்சு

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் தரப் புப் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பொன்று அம்பாறை திருக்கோவில் அரசியல்துறைச் செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப் பில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தூயவன்,அரசறிவியல்க் கல்லூரிப் பொறுப்பாளர் அரசண்ணா, அம்பாறை மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஆகியோரும் முஸ்லிம் பிரதிநிதிகள் தரப்பில் மட்டக்களப்பு அம் பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் சபைத் தலைவர் தலைமையிலான ஏழு பேர் கொண்ட குழுவினரும் பங்குகொண்டனர்.

இச்சந்திப்பில் தமிழ்- முஸ்லிம் மக்களின் உறவு குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. (ற-121)

# ஆசிய நாடுகளின் அரசியல்கட்சி மாநாடு 3ஆம் திகதி பீஜிங்கில் ஆரம்பம்

(கொழும்பு)

சனாவில் நடைபெறவுள்ள ஆசிய நாடுகளின் அரசியல் கட்சிகளுக்கான மூன்றாவது சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ளவென சிறிலங்கா சுதந் திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி மற்றும் இலங்கை சோசலிஸக் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதி நிதிகள் சீனா செல்லவுள்ளனர்.

சீனாவின் சோசலிஸக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாடு, எதிர்வரும் செப்ரெம் பர் மாதம் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை பீஜிங்கில் நடைபெறவுள்ளது.

இமமாநாட்டின் முக்கிய பொருளாக ''பிராந்தியப் பாதுகாப்பு, பல்தேசிய ஒத்துழைப்பு, பொருளாதார, சமூக அபிவிருத்தி மற்றும் அரசியல் கட்சிகளின தேசிய வளாச்சி''ஆகியன அமையவுள்ளதாகத் தொியவரு கின்றது.

இதேவேளை, சீனாவிடமிருந்து அரசியல் மற்றும் நிதி ஒத்துழைப்பைப் பெறுவது தொடாபாக இம் மாநாட்டுக்குச் செல்லவுள்ள ஜே.வி.பியின் பிரதிநிதி கள் சீன சோசலிஸக் கட்சியுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளதாக வெளியான செய்திகளை ஜே.வி.பி. மறுத்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தொிவித்த ஜே.வி.பி யின் பொதுச்செயலாளா ரில்வின் சில்வா, சீன சோச லிஸக் கட்சியோ அல்லது சீன அரசாங்கமோ மற்றைய நாடுகளின் அல்லது மற்றைய அரசியல் கட்சிகளின் உள்விவகாரங்களில் தலையிடாதென்பது அனைவரும் அறிந்த விடயம் எனக் குறிப்பிட்டார். (ற)

# நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த சிங்கள மக்களே அதிகம் பாடுபட வேண்டும்

## யாழ். குடாநாட்டு புத்திஜீவிகள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் மீண்டும் போா ஆரம்பிப்பதற்கான சமிக்ஞைகள் தான் தற்போது அதிகளவில் தென்படுகின்றன. சமாதானம், பேச்சுவார்த்தை என்பதெல்லாம் எட்டாக் கனி போல் தோன்றுகிறது. அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் அடுத்தடுத்து இடம்பெறும் கொலைகளும் அதையடுத்து தற்போது உருவாகியுள்ள பதற்றநிலைகளும் இதற்குச் சான்றாகும்.**

எனவே, சமாதானப் பேச்சுவாா்த்தையைத் தொடாவது அரசியல்வாதிகளின் கைகளில் இல்லை. கடந்த இரு பொதுத்தோதல்களிலும் சமாதானத்திற்காகப பேச்சுவார்த்தையை மீண்டும் தொடாவதற்காக வாக்களித்த பெரும்பான்மையான சிங்கள மக்களின் கைகளில் தான் இது தங்கியுள்ளது. வீடுகளில் முடங்கியிருந்து வேடிக்கை பார்க்காமல், வீதியில் இறங்கி நாட்டின் சமாதானத்திற்காகப் போராட வேண்டிய கட்டாய தேவை வந்துவிட்டது. தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் அழிவையும், ஆபத்தை யும் தான ஏற்படுத்தும் என குடா நாட்டு அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் தெரிவிததுள்ளனர்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள், இவ்வாறு கூறியுள்ளனர். சமாதானக் காற்றைச் சுவாசிக்க வேண்டுமானால் சிங்கள தேசம் தான் முன்னின்று பாடுபட வேணடும். தமிழ் மக்களை விடச சிங்கள மக்கள் தான் அதிகம் சமாதானத்திற் காகப்பாடுபட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. கட்டிய நாய ஒரு வட்டத்திற்குள் நின்று குரைப்பது போல் சமாதானத் திற்கெதிராக, பேச்சுவார் த்தைக் கெதிராகக் கூக்குரல் போடும் பேரினவாத சக்திகளை ஓரம் கட்டுவதும் சிங்கள மக்கள் கை யில் தான் தங்கியுள்ளது.

பேரினவாதம் என்பது இன்று நேற்று உருவானது அல்ல, இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டே வளர்ந்து கொண்டே வருகிறது. தமிழ் பேசும் மக்களுடைய உரிமையை வழங்குவதற்கு தொடர்ந்தும் அது தடைபோட்டுக் கொண்டே வருகிறது. இவர்களின் கெடுபிடியால் அன்று பல ஒப்பந்தங்கள் கிழிதெறியப்பட்டன. அதே போல் இன்றும் பேரினவாதிகளின் கெடு பிடியால் தமிழ் மக்களுடைய பிரச் சினைக்குத் தீர்வுகாண முடியாது இருக்கிறது. அன்றைய நிலை இன்றில்லை. தமிழ் இனம் ஆயுதரீதியிலும் அரசியல் ரீதி யிலும் வளர்ச்சி அடைந்து தனி இடத்தைப் பிடித்துள்ளது. அன்று தமிழர்களை ஏமாற்றியது போல் இன்று அவர்களை ஏமாற்ற முடியாது.

இரு தசாப்தகாலமாக ஆயுதம் தூக்கிப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த விடுதலைப்புலிகள் இன்று ஐக்கிய இலங்கைக்குள் சமாதானமாக வாழ்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை சிங்கள தேசத்திற்கு வழங்கியுள்ளார்கள். ஆனால், பேரின வாதிகள் அதே பல்லவியையே பாடுகிறார்கள். நாடு இரண்டா வதற்கு இவாகள் தான் மூலகாரண மாக இருக்கப் போகிறார்கள்.

சிங்கள மக்களுக்கு இருக்கும் உரிமைகள் அத்தனையும் தமிழ் மக்களுக்கும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை விடுதலைபபுலிகள் முன்வைத்தார்கள். இதை உணர்ந்த ஐக்கிய தேசியக்கட்சி இதன் அடிப் படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிபபதே நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மையைக் கொடுக்கும் என்று உணர்ந்ததுமல்லாமல் புலிகளின் கோரிக்கைக்கு அமைவாக பேச்சுவாாத்தை ஆரம்பிக்கப்படுமானால் ஜனாதி பதிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் முழு ஆதரவு வழங்குவதாகவும் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இது குறித்து கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் அவா்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (ந-121)

## இலவசக கணனிக் கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியாவில் இயங்கும் தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் தென்மராட்சி மக்கள் நலச் சேவைச் சங்கமும் சாவகச்சேரி நகரசபையும் இணைந்து சாவகச்சேரியில் இலவச கணனி கற்கை நெறி ஒன்றினை எதிர் வரும் 5ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.

சாவகச்சேரி நவீன சந்தை யின் மேல் மாடியில் நடாத் தப்படவிருக்கும் இப்பயிற்சி நெறிக்கென பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன என தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தின் இணைச செயலாளர் ஆர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்துக்கென தென் மராட்சி அபிவிருத்தி நிறுவனம் 15 கணனிகளை அவுஸ் திரேலியாவில் இருந்து அனுப்பி வைத்துள்ளது. (ந-16)

## ஒலிபெருக்கிகளால் இடையூறு ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஒலிபெருக்கிகளால் இடையூறுகள் ஏற்படுவதாக சர்வதேச மாணவர் பேரவையினர் நேற்றையதினம் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளனர்.

யாழ். வன்னிய ஸ்ரீ பத்திர காளியம்மாள் ஆலய நிர்வாகத்தின் ஒலிபெருக்கிகளை யாழ். பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு அருகாமையில் விடுதியை நோக்கிய வகையில் பொருத்தியுள்ளதால் விடுதியிலுள்ள மாணவிகளுக்குக கல்வி கற்பதில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

இதனைத் தவிர்த்து பெண்கள் விடுதியை நோக்கிய வண்ணம் பொருத்தப்படடுளள ஒலிபெருக்கிகளை வேறு திசைக்கு மாற்றுவதற்கும் ஒலியளவைக் குறைத்துப் போடுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கோாியே சர்வதேச மாணவர் பேரவையினர் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

இம்முறைப்பாட்டை அடுத்து, யாழ். மனித உரிமை ஆணைக் குழுவினர் வன்னிய ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய நிர்வாகத்திற்குப பாடல்களை ஒலியளவைக் குறைத்துப் போடும் படியும் பெண்கள் விடுதியை நோக்கிய வண்ணம் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிபெருக்கிகளை வேறு திசைக்கு மாற்றும் படியும கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். (ந-19)

## இரதோற்சவப் பெருவிழா



(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய இரதோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்தப் பெருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்களின் வருகையையொட்டி விசேட போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மண்முனை, அம்பிளாந்துறை போக்குவரத்துக்காக இரவு நேர விசேட படகுச் சேவைகளும் இடம்பெற்றன. (ந)

---

## நல்லூரான் திருவடிக்கு



பதினொராம் திருவிழா

### சமாதானம் வேண்டும் ஐயா!

நல்லூர்க்கந்தா ஐயா நல்லூர்க்கந்தா
உன்னடியை நாடிவந்தோம் நல்லூர்க்கந்தா
உன்குழந்தை நாங்களெல்லாம் நல்லூர்க்கந்தா
எம்மையெல்லாம் காத்தருள்வாய் நல்லூர்க்கந்தா

அலங்காரவாகனத்தில் நல்லூர்க்கந்தா
அழகாகக்காட்சி தரும் நல்லூர்க்கந்தா
வேற்றுமைகள் வேண்டாம் ஐயா நல்லூர்க்கந்தா
சமாதானம் வேண்டும் ஐயா நல்லூர்க்கந்தா

சமூகஜோதி கா.கணேசதாசன்

### சமாதானம் அருள்வாய் முருகனே

கொள்ளை நோயால் வருந்தாமல்
கொன்று மாமிசம் புசிக்காமல்
உள்ளக் கமலத்தில் உன்பதம்
வைத்துப் பூசிக்க அருள்வாய்
கள்சொரி மலரணி நல்லூர்க்
கந்தனே ஆதினம் முதலாய்ப்
பள்ளிச் சிறுவர் வலம் வந்து
பண்ணிசை பாடவருள் பவனே!

சலங்கையொலி கிங்கிணி நாதம்
ஒலிக்க கன்னியர் இருவருடன்
சலசல வெனப்பாய் மாணிக்க
கங்கை யருகிற் பதிகொண்டு
இலங்கைத் தமிழ்மொழி காக்கும்
நல்லைக் கோட்டத்து முருகனே!
கலங்கும் தமிழரின் கண்ணீர்
கருணைகொண்டு துடைப்பாய் குகனே!

சாமிமலை முதலாய் ஆறுபடை
வீடு கொண்ட வேலனே
காமனை எரித்த கதிர் சடை
அண்ண லளித்த கந்தனே
பூமி யெங்கும் குருதி
வெள்ளம் பெருக்கும் தமிழர்
சேமமாய் உன்னருளால் வாழ
சமாதானம் அருள்வாய் போற்றி

குப்பிளானூர் மாதாஜி

### "வீதிவலம் வருகிறாய்"

" சங்கிலிய மாமன்னன் செங்கோலோச்சிய
திரு நல்லை நகரிலே வாசம் கொண்டாய்
அடியவர்க்கருள் புரிய தினமும் வேலேந்தி
எழிலாக வீதி வலம் வருகிறாய்
சான்றோர் பெண்டிர் சிறார்களும் சூழவே
வள்ளி தெய்வயானை மருங்கிருத்தி வருகிறாய்
தெள்ளுதமிழ் காவலனே கந்தா நீ
தமிழர் நாமுற்ற இடர் களையவே வருகிறாய்"

"நயினை விஜயன்"

### திருவருள் சரணெனத் தேடிவந்தேன்

இராகம்:நாட்டைக்குறிஞ்சி தாளம்: ஆதி

பல்லவி

திருவருள் சரணெனத் தேடி வந்தேன்
தேவாதி தேவா திருநல்லை வாசா (திருவருள்)

அ.பல்லவி

பரிபுர முரலெழ பத நம் பயில் சிவ
பரனருள் ஆறுமுக சரவண பவ நின் (திருவருள்)

சரணம்

அருள் முக மோராறும் அணிமலர் ஈர்பதமும்
கரமிசை வடிவேலும் கண்மலர் ஈராறும்
மருவிய மட மாதர் மருங்கினில் எழில் ஆர
மயில்மிசை ஒயிலாக மனதுறை முருகேசா (திருவருள்)

அரஹர ஒலி எழ அடியவர் வலம் வர
அமரரும் அணிமலா முறை முறை சொரிதர
குருபரன் எனஉனை கயிலையின் நினைவொடு
தரிசனம் பெறுபவர் தமதிட கழையும் நின் (திருவருள்)

பண்டிதர் சி.கா.சேந்தன்.

# கல்விப் பொதுத் தராதர (சா/த)
# மாதிரிப் பரீட்சை - 2004
## General Certificate of Examination (Ord. Level)
## Model Examination - 2004

**சைவ சமயம் II** **மணி - 3**

☐ நான்காம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

(01) ஆன்மாக்கள் உடம்பின் துணை கொண்டு நல்வினை தீவினை களைச் செய்கின்றன.
1. சைவ ஒழுக்கத்தை பின்பற்றுவோர் கடைப்பிடிக்கவேண்டிய விடயங்கள் சில தருக?
2. சமய தீட்சை பெற்றவர் கடைப்பிடிக்க வேண்டியவை யாவை?
3. மதமாற்றத்தில் ஈடுபடும் இந்துக்களைத் தடுக்க நீர் கூறும் புத்திமதிகள் சில தருக?
4. பசுவதை தடைசெய்யப்ப வேண்டியதன் அவசியத்தை விளக்குக?

(02) திருமூலரால் சிவபூமி எனக் குறிப்பிடுமளவிற்கு ஆலயங்கள் விளங்கும் பெருமை மிக்கது ஈழநாடு
1. ஈழத்தில் காணப்படும் ஈச்சரங்கள் எவை?
2. தேவாரப் பாடல் பெற்ற தலங்களின் இறைவன், இறைவி பெயர் யாது?
3. ஈழத்தில புகழ் பெற்ற முருகன் ஆலயங்கள் எவை?
4. முற்றிலும் கருங்கற்களால் அமைக்கப்பட்ட ஆலயம் எது?

(03) சித்தாந்த அட்டகத்துள் எளிமையும் அருமையும் நிறைந்தது திருவருட்பயன்
1. இறைவனின் வியாபகத்தன்மையை விளக்குக?
2. ஆன்மாக்களை வகைப்படுத்துக?
3. ஆவணத்தின் இயல்பு யாது?
4. சிந்தாந்த அட்டகத்தில் அடங்கும் ஏனைய நூல்கள் எவை?

(04) அ. பின்வரும் பாடல்கள் இரண்டினைப் பிழையற எழுதுக.
ஆ. அவற்றைப் பாடியோர், தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.
இ. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.
1. மண்ணில் நல்ல வண்ணம்
2. கரிய கறைக் கண்டன்
3. உருவாய் அருவாய்
4. தங்கடம்பனை
5. சொல்லாண்ட சுருதிப்பொருள்

(05) கிரியைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் அனுஷ்டிக்கும் நியதிச் செயல்களாகும்
1. கிரியைகளின் பிரிவுகள் எவை?
2. ஆலயக் கிரியைகளை விளக்குக?
3. திருமணக் கிரியைகளின் ஒழுங்கு முறையைத் தருக?
4. அபரக் கிரியைகளில் அடங்குபவை எவை?

(06) ஈழத்தின் புராதன குடிகளான இயக்கரும், நாகரும் சிவ வழிபாட்டினர் என பண்டைய நூல்கள் குறிப்பிடுகின்றன.
1. இதிகாசங்கள் குறிப்பிடும் பண்டைய சிவவழிபாட்டினர் பெயர்கள் தருக?
2. வேலாயுதம், சேவற்சிலை, காவடிச் செடில்கள் கிடைக்கப்பெற்ற இடங்கள் எவை?
3. பிறமத ஊடுருவல் ஏற்பட்டபோது சைவத்தைக் காக்க நாவலர் மேற்கொண்ட சமயப் பணிகள் எவை?
4. சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரால் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள் எவை?

(07) "நால்வர் பொற்றாள் எம் முயிர்த்துணையே"
1. சமயகுரவர் யாவர்?
2. சமயகுரவர்களுள் முதற்குரவராக விளங்குபவர் யார்? அதன் காரணம் யாது?
3. தேவார முதலிகள் மூவரும் முதலில் பாடிய பதிகம் யாது?
4. நாவுக்கரசர் செய்த அற்புதங்கள் 4 தருக? அச்சந்தர்ப்பத்தில் பாடிய அருட்பாடல் எது என்பதைக் குறிப்பிடுக.

(08) "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" (பெரியபுராணம்)
1. "பெருமாக் கோதையார்" எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
2. "தம்பிரான் தோழர்" என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர் யார்?
3. சேரமான் பெருமான் மீண்டும் அரச பதவியை ஏற்றபோது அவருக்கு இறைவன் எவற்றை அருளினார்.
4. சுந்தரர் கைலை சென்ற கதையைச் சுருக்கமாகத் தருக.

**வியாழன் தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி I வினாத்தாள் வெளிவரும்.**

## சைவசமயம் பகுதி I இன் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | (2) | 11. | (2) | 21. | (3) | 31. | (2) |
| 2. | (1) | 12. | (2) | 22. | (4) | 32. | (1) |
| 3. | (2) | 13. | (3) | 23. | (2) | 33. | (1) |
| 4. | (2) | 14. | (3) | 24. | (1) | 34. | (4) |
| 5. | (3) | 15. | (3) | 25. | (1) | 35. | (4) |
| 6. | (3) | 16. | (1) | 26. | (1) | 36 | (2) |
| 7. | (2) | 17. | (1) | 27. | (1) | 37. | (1) |
| 8. | (2) | 18. | (2) | 28. | (2) | 38. | (2) |
| 9. | (2) | 19. | (2) | 29. | (3) | 39. | (3) |
| 10. | (4) | 20. | (1) | 30. | (1) | 40. | (3) |

# தகவல் தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கு வெளிநாடுகளில் கணனிப் பயிற்சி

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பப் பாடங்களை போதிக்கும் அசிரியர்களுக்கு வெளிநாடுகளில் சர்வதேச தரத்திலான கணனிப் பயிற்சியை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சர்வதேச ரீதியில் நாளாந்தம் வளர்ந்து வரும் கணனித் தொழில்நுட்பத்தை இலங்கை ஆசியர்களுக்கும் மாணவர் களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்காகவே இத்தகைய பயிற்சிகள் வழங்கப்பட வுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 2.5 ஆசிரியர்களுக்கு பாங் கொங்கில் 3 மாத காலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்த ஒவ்வொரு மாகாணத்தி லிருந்தும் 5 ஆசிரியர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிக்காக அனுப்பப்படு வார்கள்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் விசேட சித்தி பெற்ற 50 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் மட் டுமே இந்தப் பயிற்சிக்காக அனுப்பப் படவுள்ளனர். (ந-க,61)

### அரசின் அத்துமீறல்கள் குறித்து
# ஐக்கிய நாடுகள் சபையிடம் ஐ.தே.கட்சி முறையிடவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்ப டுவது தொடர்பாக ஆளும் ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத் தக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை யிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்

இதன்படி, விரைவில் ஐக்கிய தேசி யக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவொன்று ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணைக் குழுச் செயலகத்திற்கு செல்லவுள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மனிதவுரிமை மீறப்படும், வகையில் தமது உப்பினர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை ஆளும் கூட்ட மைப்பு அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளக பாராளுமன்றச் சங்கக் கூட்டத்தின் போது அரசாங்கத்தின் இந்த முறைகேடான நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சின் முன்னாள் அமைச்சார்களான ரவி கருணா நாயக்க மற்றும் அப்குல் காதர் ஆகியோரின் கைது நடவடிக்கைகள் மூலம் இலங்கையின் சட்டதிட்டங்களை மதிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தவறியுள்ளது எனவும் ஜயலத் ஜயவர்த் தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசியல் பழிவாங்கல்களுக்காக அதி காரத்தை துஷ்பிரயோகப் செய்துவரும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர் பான முறைப் பாட்டினை ஐக்கிய தேசி யக் கட்சி தயாரித்து வருகின்றது.

மனிதவுரிமை ஆணைக்குழு மற் றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றி டம் இந்த முறைப்பாடுகள் கையளிக்கப் படவுள்ளன. (ந-121)


**க.பொ.த. (சா.த)**
**மாணவர்களே! வலம்புரியில்**
**தொடர்ந்து பயிற்சி**
**வினாத்தாள்கள்**
**வெளிவருகின்றன.**


# விவாத அரங்கு -5

விடயம்
வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றது, பாதுகாக்கின்றது.

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பிவையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## 16-20 வயதுவரையான இருபாலாருக்கும்

# வட-கிழக்கில் எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில் சின்னமுத்து ருபெல்லா தடுப்பு மருந்து வழங்கல்

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள் திணைக்களப் பிரிவில் எதிர்வரும் 11,12ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ள சின்னமுத்து ருபெல்லா தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் குடும்ப சுகாதாரப்பணியக வைத்திய அதிகாரி டாக்டர் என். செனிவரத்தின தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தில் இத் தடுப்புமருந்தேற்றல் திட்டம் தொடர்பான விரிவான கலந்துரைடல் ஒன்று யாழ். மாவட்ட தாய்சேய் நல அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதில் டாக்டா என்.செனிவரத்தின மேலும் தெரிவிக்கையில், இந்தத் தடுப்பு மருந்து 16 தொடக்கம் 20 வயது வரையான ஆண், பெண் இருபாலாருக்கும் இலங்கையின் சகல மாவட்டங்களிலும் செப்ரெம்பர் 11,12 ஆம் திகதிகளில் வழங்கப்பட்டவுள்ளது.

தற்போது சின்னமுத்து நோய் வயது வேறுபாடின்றி பலவிதமாகத் தாக்கிவருவதை கருத்திற்கொண்டு வைரசால் எற்படும் தொற்றுக்களைக் குறைக்கும் நோக்குடனேயே இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாகவே கடந்த வருடம் 10-14 வயதுக் குட்பட்டவர்களிற்கு பாடசாலைகளில் வைத்து சின்னமுத்து தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

அத்துடன், 1999 - 2000 ஆம் ஆண்டுகளில் கட்டுப்பாட்டை மீறிய நோய் தொற்று காரணமாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்களின் விபரங்களைக் கருத்திற் கொண்டே மேற்படி 16 - 20 வயதிக்கும் இதனை வழங்குவது எனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இத்தடுப்பு மருந்தை வழங்குவதன் மூலம் பிள்ளைப் பேற்றுக்காலத்தில் பிள்ளைக்கு பிறப்பிலிருந்து ஏற்படக்கூடிய ருபெல்லா எனும் ஆபத்தான நோயை தடுப்பதற்கும் உபயோகமாக இருக்கும்.

இதன் முக்கியத்துவத்தை சகலருக்கும் உணர்த்துவதன் மூலம், சகல இவ்வயதுப் பிரிவினருக்கும் தடுப்பு மருந்தை வழங்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டத்தில் தடுப்பு மருந்தேற்றும் திட்டத்திற்கு யாழ். மாவட்டத்தில் ஆளணிவளம் குறைவாக இருப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதற்கு யாழ்.போதனாவைத்தியசாலையில் பணிபுரியம் தாதியர்களை மேற்படி தினங்களில் கடமைக்கு அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளுமாறும் சமூக மட்ட அமைப்புகளை, சனசமூக நிலையங்கள், மாதர்சங்கங்கள் மற்றும் இளைஞர், யுவதிகளின் அமைப்புகளின ஒருங்கிணைப்புடன் இதனை நடைமுறைப்படுத்துவதும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனத்தாருக்கும் இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளன.

அத்துடன், நடமாடும் வாகனங்கள் ஊடாகவும் இத்தினங்களில் இத் தடுப்பு மருந்து ஏற்றவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(ந-252)

# புதிய இந்தியத் தூதுவருடன் கூட்டமைப்பு விரைவில் சந்திப்பு

இலங்கைக்கான புதிய இந்தியத தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள நிருபமாராவை தமிழ்த் தேசியக் கூட்டமைபபினா் விரைவில் சந்தித்துப் பேசவுளளனா். புதிய தூதுவராக நியமிககப்பட்டுள்ள இவா், இன்னும் சில தினங்களில தமது பொறுப்புகளை உத்தியோகபூா வமாக ஏற்றுக கொள்ளவுள்ளாா்.

புதிய தூதுவர் தனது பொறுப்புக்களைப் பொறுப்பேற்ற பின்னர், அவரைச் சந்தித்து இந்தியாவுககான விஜயம் குறித்து; கூட்டமைப்பினா் கலந்துரையாடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவா இரா.சம்பநதன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இந்தியத் தலைவர்களைச் சந்தித்து அங்குள்ள அகதிமுகாங்களில் தங்கியுள்ள ஈழத் தமிழா் களின் நிலைப்பாடு குறித்து எடுத்துக் கூறுவதற்காக விரைவில் இந்தியாவுக்கு தாம் விஜயம் செய்யவுள்ளதாகவும், இதுகுறித்து புதிய தூதுவருடன் கலந்துரை யாடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவுடன் நட்புறவைப் பேணும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட முடிவு செய்துள்ளனர். இதன் ஒரு கட்டமாகவே இந்தியாவுக்கு இவர்கள் விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-121)

# ரட்ணசிறியின் கருத்துக்களுக்கு சிங்கள மக்கள் கடும் விமர்சனம்

(கொழும்பு)

இலங்கையின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவால் அண்மைக் காலமாகத் தொடர்ந்து வெளியிடப் பட்டுவரும் கருத்துக்களுக்கு தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் பலத்த விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது இலங்கையில் இல்லாத நிலையில், பதில் பாதுகாப்பு அமைச்சராகக் கடமையாற்றிவரும் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்ட கருத்துக்களை அண்மைக் காலமாக வெளிப்படுத்தி வருகின்றார்.

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் போரிடத் தயார் என்பது போல அமைச்சர் வெளிப்படுத்தியிருக்கும் மோசமான கருத்துக்கள் யதார்த்தத்துக்கு முரணானவை என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

இத்தகைய கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் இரண்டரை வருடகாலமாகப் பேணிப்பாது காத்து வரும் போர் நிறுத்த உடன்படிக்கையை முறிப்பதற்கு அமைச்சர் தீர்மானித்துள்ளாரா என்று கேள்வி எழுப்பியுளள அரசியல் ஆய்வாளர் ஒருவர், போர் ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு படையினர் எவ்வளவு தூரம் தயாராக இருக்கின்றனர் என்றும் வினவியுள்ளார்.

கடந்த காலத்தில் தீச்சுவாலை படை நடவடிக்கை, ஆனையிறவு முகாம் தாக்குதல் மற்றும் கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் மீதான தாக்குதல் போன்றவற்றில் படையினர் சந்தித்த பல இழப்புக்களையும், அதனால் இலங்கைக்கு ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியையும் அவ்வளவு சுலபத்தில் மறந்துவிட முடியாது.

அத்துடன், மீண்டும் போர் ஒன்றை ஆரம்பிப்பது குறித்து சிந்திப்பதை விட்டுவிட்டு, 2002 ஆம் ஆண்டு ஒஸ்லோ மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டதற்கு அமைய, சமஸ்டி அடிப்படையிலான தீர்வைக் காண்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்றும் அவர் அமைச்சருக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

இலங்கையில் மீண்டும் ஒரு போர் ஆரம்பிக்கப்படுமாக இருந்தால், அதனை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் எல்லா விதத்திலும் தயாராக இருப்பதையும் அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டுமென வும் அவர் தனது கட்டுரையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தரை மாற்றுவது குறித்தும், புதிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை ஈடுபடுத்துவது குறித்தும் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பாகவும் அவ் ஆய்வாளர் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வரைந்துள்ள தனது கட்டுரையில் விசனம் தெரிவித்துள்ளார். (ந-121)



மேற்கு வங்கத்தின் சிலிகுரி நகரில் மகாநந்தா ஆற்றங்கரையில் கட்டிட வேலைக்காகக் கல்லுடைக்கும் தொழிலாளர்

# ரூபா 3.5 கோடி பெறுமதியான கார் இந்திய சாலைகளில் ஓடும்

(மும்பை)

இந்திய சாலைகளில் அடுத்த மாதம் முதல் ரூபா 3 கோடியே 50 லட்சம் மதிப்புள்ள 'ரோல்ஸ் ராய்ஸ்சின் பான்டோம் கார்' அறிமுகமாகிறது. ரோல்ஸ்ராய்ஸ்சிக் புதிய தயாரிப்பான பான்டோம் ஆடம்பரக் கார், அடுத்த மாதம் இந்திய சாலைகளை முத்தமிடப்

கம் இருந்தனர் என்பது தெரியும். 1930-1940ஆம் ஆண்டுகளில் மகாராஜாக்கள், அவர்களின் சொந்த பந்தங்களின் விருப்பத்திற்கு இனிய காரக 'ரோல்ஸ் ராய்ஸ்' வைத்திருந்தனர் அவர்களுக்காக கார்களை புக்செய்து டெலிவரி செய்வதற்காகவே லண்டனில் தனி அலுவலகம் இருந்தது.

காட்சிப் பொருளாக 'பான்டோம் காரை' இந்தியாவைச் சேர்ந்த நவீன்ந் மோட்டார்ஸ் நிறுவனம் இறுக்குமதி செய்கிறது.

இந்நிறுவனம் கடந்த பத்தாண்டுகளாக ப.எம்.டபள்யூ கார்களை இறக்குமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது. ரோல்ஸ் ராய்ஸ் பெயர் உரிமையை ப.எம்.டபிள்யூ



...கும் தொழிலாளர் களின் குழந்தைகள்.

சிக் புதிய தயாரிப்பான பான்டோம் ஆடம்பரக் கார், அடுத்த மாதம் இந்திய சாலைகளை முத்தமிடப் போகிறது. இதன் விலை, ரூபா 3 கோயே 50 லட்சம். டய்மிலர் கிரிஸ்லர் அறிமுகத்தில் இந்திய சாலைகளில் விரைவில் ஓட உள்ள குரார்பதி 'காரன மேபாக்' கிற்கு போட்டியாக பான்டோம் வருகின்றது.

மேபாக்கின் விலை ஐந்து கோடி. விலை, கோடிகளில் இருந்தாலும் இந்தியவைச் சேர்ந்த ஐந்து பேர், 'மேபாக்கிற்கு ஆர்டர்' செய்துள்ளனர். வருடத்திற்கு பத்துக் கார்களை இந்தியாவில் விற்கவேண்டும் என்பது 'டய்மிலர் கிரிஸ்லர்' திட்டம். முன்பு நம்நாட்டில் கார்ப்பிரியர்கள் அதி

கார்களை புக்செய்து டெலிவரி செய்வதற்காகவே லண்டனில் தனி அலுவலகம் இருந்தது.

அந்த காலக்கட்டத்தில் இந்தியாவில் 750 'ரோல்ஸ் ராய்ஸ்' கார்கள் சுற்றி வந்தன. அவற்றில் ொரும்பாலானகார்கள், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள தனியார் அருங்காட்சியகங்களில் தற்போது உயிருடன் உள்ளன.

கார்களை இறக்குமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது. ரோல்ஸ் ராய்ஸ் பெயர் உரிமையை ப.எம்.டபிள்யூ நிறுவனம் 1999 ஆம் ஆண்டு வாங்கிவிட்டது. இந்நிறுவனம் லண்டன் அருகேயுள்ள தனது புத்தம் புது 'குட்- வுட்' தொழிற் சாலையில் 'ரோல்ஸ் ராய்ஸ் ' 'சின் பான்டோம்' கார்களை தயாரிக் கிறது. (து)

## காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாக் — ரூபா 50 கோடி ஒதுக்குகிறது

ஜம்மு - காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவும், பிரிவினைவாத சக்திகளைத் தூண்டி விடவும, கோடிக்கணக்கான ரூபாவை ஆண்டுதோறும் பாக்கிஸ்தான் செலவு செய்கிறது என்று அம் மாநில அரசு தகவல் வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஜம்மு - காஷ்மீர் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, காஷ் மீரில் உள்ள தீவிரவாதிகளும் பிரிவினைவாதிகளும் ஆண்டுக்கு ரூபா 50 கோடிக்கும் மேல் பாகிதானிடம் இருந்து பெறுகின்றனர்.

மாநிலத்தில் பயங்கரத் தாக்குதலகள் போன்ற அரசுக்கு நெருக்கடி உண்டாகும் சதிவேலைகளில் ஈடுபட ஒவ்வொரு ஆண்டும் கோடிக் கணக்கான பணம் பாகிஸ்தானில் இருந்து காஷ்மீருக்கு அனுப்பபப்படுகிறது. பாகிஸ்தான் தரும் பணம் தவிரகட்டாய நன்கொடைவரியில் போதை கடததல், மரக் கடத்தல், ஆட்களை மிரட்டி பணம் பறித்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள மூலமும் தீவிர வாதிகள் நிறையப் பணத்தை சேர்க்கின்றனர்.

கடநத 99 இல் எல்லையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பாக்.கில் இருநது ஊடுருவ முயன்ற தீவிரவாதி ஒருவன் கொல்லப்பட்டான். அவனிடம் இருந்து 2 கோடி இந்திய ரூபாய நோட்டுககள், மூன்று லட்சம் பாகிஸ்தான் ரூபாய் நோட்டுக்கள், ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டன. கடந்த 2003 ஏப்ரல் 2இல் ஸ்ரீநகர் நதிபோரா பகுதியில் ஹிஸ்புல் முஜாகிதீன் கமாண்டர் சைப் உல், இஸ்லாம் சுட்டுக்கொல்லப்பட்டான். அவனிடம் இருந்து ரூ.97 லட்சம் கைப்பற்றப்பட்டது.

காஷ்மீரில் சையத் அலி ஷா கிலானிக்கு ஆதரவாக உள்ள பிரிவினைவாத இயக்கங்களுக்குப் பாகிஸ்தான் ஏராளமான பணத்தை அனுப்பி வந்தது. ஆனால், ஹுரியத் கோஷ்டிகளுக்குள் கருத்து முரணபாடுகள் ஏற்பட்ட பின், பணம அனுப்புவதை பாக். நிறுத்திக் கொண்டது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


(து)

## இந்திய - பகிஸ்தான் அமைச்சர்கள் சந்திப்பு

எல்லை தாண்டிய பயங்கரவாதப் பரச்சினை மற்றும் தற்போது பாகிஸதானிலுள்ள பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கலெனச் சந்தேகிக்கப்படும் 25 பேரை தங்கள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்பது தொடர்பானவற்றை வரவிருக்கும் இந்திய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பின போது இந்தியா எழுப்பும் என்று நட்வர்சிங் தெரிவித்தார்.

பொங்களூரில்நிருபர்களிடம்பேசுகையில் பேச்சுகள் அடுத்த மாதம் 5,6 ஆம் திகதிகளில் புதுடில்லியில் இடம பெறுமென்று தெரிவித்தார். (து)

# இந்தியச் செய்திகள்



புதுடில்லியிலிருந்து அலிகார் செல்லும் தினசரி காலை ரயில் இது. இதில் பால்கான்களுடன் பால்காரர்களின் ஆக்கிரமிப்பு தான் எப்பொழுதும் இருக்கும். இதனால் இந்த ரயிலில செல்லும் பயணிகளின் பாடு தினமும் திட்டாட்டம் தான்.



பெண்களுக்கான 400மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் தங்கம் வென்ற அமெரிக்க மங்கையர் இவர்கள். வெற்றிப் பதக்கங்களுடன் புன்கை புரிகின்றனர். இவர்கள் இப் போட்டியில் 3 நிமிடம் 19.01செக்கன்களில் இலக்கை அடைந்தனர்.

## 56ஆண்டுக்குப் பின் எகிப்துக்கு தங்கம்

ஒலிம்பிக்கில் 56ஆண்டுகளுக்குப்பின் எகிப்துக்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.

96கிலோ எடைப்பிரிவுக்கான மல்யுத்தப் போட்டியில் கராம் இப்ராஹிம் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

கடைசியாக 1948ல் லண்டன் போட்டியில் எகிப்து 2தங்கப்பதக்கங்களைப் பெற்றபின், எதென்ஸிலேயே தற்போது மீண்டும் தங்கம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

## தடகளப் போட்டிகளில் சீனாவுக்கு தங்கத்திற்கு மேல்·தங்கம்

எதென்ஸ் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 110மீற்றர் தடைதாண்டல் ஓட்டப்போட்டியில் சீன வீரரொருவர் தங்கப்பதக்கத்தைப் பெற்றிருப்பது அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது.

இப் போட்டியில் பங்குபறறிய சீன வீரா் லியு ஜியாங் 12.91விநாடிகளில் கடந்து தங்கப்பதக்கத்தைப் பெற்றார். இதனால் இவர் 11ஆண்டுகளுக்கு முன்னா் இடம்பெற்ற பிரிட்டன் வீரா் கால் ஜோன்சனின் சாதனையை சமன் செய்துள்ளார்.

இதேபோல், பெண்களுக்கான 110மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியிலும் சீன வீராங்கனையே தங்கம் வென்றுள்ளார்.

அத்துடன், 5ஆயிரம் மீற்றர், 10ஆயிரம் மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்போட்டியிலும் சீன வீராங்கனைகளே தங்கம் வென்றிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ற-7)

## 2008 ஒலிம்பிக் சீனாவில்

அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் 2008ஆம் ஆண்டு சீனாவின் பீஜிங் நகரிலும் அதனை அண்மித்த நகர்ப்புறங்களிலும் நடைபெறவுள்ளது.

இதற்கான ஆயத்தங்களை சீனா இப்போதே ஆரம்பித்துவிட்டது. மொத்தம் 3ஆயிரத்து 700கோடி அமெரிக்க டொலர்கள் இதற்காகச் செலவிடப்படவுள்ளது. ஒரு இலட்சம் பேர் அமர்ந்திருந்து·விளையாட்டுக்களைப் பார்த்து ரசிக்கக்கூடியதாக பார்வையாளர் மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே ஒலிம்பிக் கிராமத்திற்கு இயற்கை எழிலைக்கூட்டி,அழகுபடுத்துவதற்காக மலர்ச் செடிகள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. (ற-7)

## அவுஸ்திரேலியாவுக்கு சவாலாகிவரும் இலங்கைக் கிறிக்கெற் அணி

### அத்தப்பத்துவின் தலைமையில் திடீர் உத்வேகம்

சர்வதேச கிறிக்கெற் சம்மேளனத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட ஒருநாள் போட்டிகளுக்கான தர வரிசையில் இலங்கை அணி இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

இலங்கை அணிக்கு 122 புள்ளிகள் கிடைத்திருக்கின்றன. முதலாம் இடத்தை வகிக்கும் அவுஸ்திரேலியாவுக்கு 137 புள்ளிகள் உள்ளன.

அடுதத மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணிக்கு வெற்றிவாய்ப்புகள் அதிகமானால் அது அவுஸ்திரேலிய அணிக்கு பெரும் சவாலாக அமையும்.

இதேவேளை இலங்கை அணி தற்போ்து திடீரென உத்வேகம் பெற்ற அணியாக மாறி வருகிறது. இதற்கு பயிற்றுவிப்பாளர் ஜோன்டைசனின் சிறந்த வழிகாட்டலா? அல்லது அணித்தலைவர் மாவன் அத்தப்பத்துவின் சிறந்த தலைமைத்துவமா? அல்லது வீரர்கள் அணித் தொிவாளர்கள் மீது கொண்ட பயமா? காரணம என்ற கேள்வி எழுகிறது.

ஆயினும் பலரது அபிப்பிராயப்படி மாவன் அத்தப்பத்துவின் அனுபவமிக்க தலைமைத்துவமே இலங்கையணியின் முன்னேற்றத்திற்கு காரணமாகக் கூறப்படுகிறது.

மாவன் அத்தப்பத்து பதட்டம் ஏதுமின்றி பந்துவீச்சு மாற்றங்களைச் செய்வதும் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.அத்துடன், போட்டியின் போது மைதானத்தில் கடுகடுப்பாக இருந்தால் தான் அத்தலைவரை ஒரு ஆண்மைத்துவமான அணித் தலைவரெனக் கருதும் நிலை இருந்தது.

ஆனால் அந்தப்பத்து மிகவும் இயல்பாக அவுஸ்ரேலிய தலைவர் ரிககிப் பொண்டிங் போல, அணியின் தலைமைத்துவத்தை வழிநடத்துவதும், சிலவேளைகளில் கங்குலியைப் போன்று கட்டளையிடுவது போலவும், நடந்து கொள்கிறார். சர்வாதிகாரத்தன்மை, அன்பு கலந்த போக்கு ஆகிய இரண்டுமே அத்தப்பத்துவை ஒரு ஆளுமை மிக்க அணித்தவைவராக மாற்றியிருக்கிறது.

அண்மைய போட்டிகளில் இலங்கை அணி விக்கெற்றுகளைக் கைப்பற்றும் போது அவர் அந்த மகிழ்வை வெளிப்படுத்தும் விதம் கடந்தகால அத்தப்பத்துவிலிருந்து வித்தியாசமாகக் காட்டுகிறது.

சில போட்டிகளில் மஹில ஜெயவர்த்னாவிற்கு தலைமைத்துவத்தைக் கொடுத்து அவரை வளர்த்து வருவதும் அணியில் அடிக்கடி மாற்றங்களைக் கொண்டு வந்து அணியை வலுப்படுத்துவதும் முக்கியமாக இளம் பந்து வீச்சாளர் டில்ஷான் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையுமே அவரை ஒரு நல்ல அணித் தலைவராக ஆக்கி வருவதைக் காணலாம்.

அத்துடன் சிரேஷ்ட பந்த வீச்சாளர்களான முரளி, வாஸ் ஆகியோரை அதிகம் களைப்படையச் செய்யாது, இளம் வீரர்களைச் சரியாகப் பயன்படுத்தும் தன்மையும் அத்தப்பத்துவை ஒரு நல்ல அணித் தலைவராக மாற்றியிருக்கின்றது. இதுதான் இலங்கையணியின் தற்போதைய முன்னேற்றகரமான நிலைக்கு முக்கிய காரணமெனலாம்.

முன்பு முரளி இருந்தால் தான் டெஸ்ட் போட்டியை வெல்லலாம், ஒருநாள் போட்டியை வெல்லலாம் என்ற நிலையிருந்தது. இப்போது முரளியும் தேவையில்லை,வாஸூம் தேவையில்லை,சொய்ஸாவும் தேவையில்லை. அத்தப்பத்துவும் தேவையில்லை என்று சொல்லுமளவிற்கு இலங்கை அணியின் தரம் சகல துறைகளிலும் வலுவாக உள்ளது. (ற-7)

சீன வீராங்கனை




## ATHENS 2004

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 35 | 39 | 29 | 103 |
| சீனா | 32 | 17 | 14 | 63 |
| ரஷ்யா | 27 | 27 | 38 | 92 |
| அவுஸ்திரேலியா | 17 | 16 | 16 | 49 |
| ஜப்பான் | 16 | 09 | 12 | 37 |
| ஜேர்மனி | 14 | 16 | 18 | 48 |
| பிரான்ஸ் | 11 | 09 | 13 | 33 |
| இத்தாலி | 10 | 11 | 11 | 32 |
| தென்கொரியா | 09 | 12 | 09 | 30 |
| பிரிட்டன் | 09 | 09 | 12 | 30 |
| கியு,பா | 09 | 07 | 11 | 27 |
| உக்ரெய்ன் | 09 | 05 | 09 | 23 |
| ஹங்கேரி | 08 | 06 | 03 | 17 |
| ருமேனியா | 08 | 05 | 06 | 19 |
| கிறீஸ் | 06 | 06 | 04 | 16 |
| நோர்வே | 05 | 00 | 01 | 06 |
| நெதர்லாந்து | 04 | 09 | 09 | 22 |
| பிறேசில் | 04 | 03 | 03 | 10 |
| சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| ஸ்பெயின் | 03 | 11 | 05 | 19 |
| கனடா | 03 | 06 | 03 | 12 |
| துருக்கி | 03 | 03 | 04 | 10 |
| போலந்து | 03 | 02 | 05 | 10 |
| நியு'ஸிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| தாய்லாந்து | 03 | 01 | 04 | 08 |
| பெலராஸ் | 02 | 06 | 07 | 15 |
| ஆஸ்திரியா | 02 | 04 | 01 | 07 |
| எதியோப்பியா | 02 | 03 | 02 | 07 |
| ஈரான் | 02 | 02 | 02 | 06 |
| ஸ்லோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |



சீன வீராங்கனை அடிக்கும பந்தை தடுக்க முயற்சிக்கின்றனர் ரஷய வீராங்கனைகள். எதெனஸில் நடைபெற்ற கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ரஷ்யா 2 செற கள் முன்னிலை பெற்றும் தோல்வியுற்றது பரிதாப மானதே.

எதென்ஸ் ஒலிம்பிக்கில சாதனை படைத்திருககும சீனா, 32தங்கப் பதக்கங களை பெற்றிருக்கிறது . பதக் கம் வென்ற சீன வீராங்கனை கள் இருவா வெற்றிப்பெரு மிதத்தில் மிதக்கின்றனர்.



# 16 வயதுப் பிரிவு துடுப்பாட்டப் போட்டி யாழ்.மாவட்ட அணி தம்புள்ள பயணம்

(யாழ்ப்பாணம்)

மாவட்டங்களிடையேயான 16 வயதிற்குட்பட்ட அணிகள் பங்கு பற்றும் துடுப்பாட்டப் போட்டி நாளை புதன்கிழமை தொடக்கம் தம்புள்ளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அணி எதிர்வரும் முதலாம் திகதி திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்தும், 2ஆம் திகதி வவுனியா மாவட்ட அணியை எதிர்த்தும், 3ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அணியை எதிர்த்தும், 6ஆம் திகதி மன்னார் மாவட்ட அணியை எதிர்த்தும் விளையாடவுள்ளது.

யாழ்.மாவட்ட அணியில் வி.ஜே.லூட்சன்(**தலைவர்**), எஸ்.வினோத (**உபதலைவர்**), ஜே.ஆர். ஏ. பிரசாத், ஆர்.ராஜீவன், கே.நிஷாகரன், எஸ்.ஜனகன்ராஜ், ரி.மயூரப்பிரியன், டபிள்யூ.ஜ. நிக்ஷன், எஸ்.அர்ஜுன்ராஜ், கே.ராஜ்குமார், வி. விது பாலா,கே.பென்ஜோய், ஜே.ஜதீஸ்வரன், பி. நவயுகன், பி.நேசவர்மன் ஆகிய வீரர்கள் இடம்பெறுகின்றனர்.

(ந-7)

| | | | | |
|---|---|---|---|---|
| ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |
| பல்கேரியா | 02 | 01 | 09 | 12 |
| ஜமேக்கா | 02 | 01 | 02 | 05 |
| உஸ்பெகிஸ்தான் | 02 | 01 | 02 | 05 |
| மொரக்கோ | 02 | 01 | 00 | 03 |
| டென்மார்க் | 02 | 00 | 06 | 08 |
| ஆர்ஜன்டினா | 02 | 00 | 04 | 06 |
| சிலி | 02 | 00 | 01 | 03 |
| கஸகஸ்தான் | 01 | 04 | 03 | 08 |
| கென்யா | [illegible] | [illegible] | 02 | 07 |
| செக்.குடியரசு | 01 | [illegible] | 04 | 08 |
| தென்ஆபிரிக்கா | 01 | [illegible] | 02 | 06 |
| குரோசியா | 01 | [illegible] | 02 | 05 |
| லிதுவெனியா | 01 | 02 | [illegible] | 03 |
| எகிப்து | [illegible] | 01 | 03 | 05 |
| சுவிஸ்லாந்து | 01 | 01 | 03 | 05 |
| இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| சிம்பாப்வே | 01 | 01 | 01 | 03 |
| அஸர்பைஜான் | 01 | 00 | 04 | 05 |

# நீரிழிவு நோய் காரணமாக உடலில் தோன்றும் சிக்கல்கள்

நீரிழிவு நோயில் பல சிக்கல்கள் ஏற்படலாம். அவற்றால், சதைநார்களுக்கு வேலை அதிகமாகி விடுகின்றது. பிரதி கூலங்கள் பல



**நீரிழிவு நோயில், பாதங்கள் பெரிதும் பாதிக்கப் பெற்று, இருதயத்திற்கும், கால்களுக்கும், கைகளுக்கும் இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய்கள் கேடடைகின்றன.**

ஏற்படுகின்றன; அகால மரணமும் ஏற்படலாம். கவலையீனமாக இருந்துவிட்டுத் தகுந்த காலத்தில் சிகிச்சை மேற்கொள்ளாமல் விட்டுவிடவே, விளைவாக மேற்கூறிய ஆபத்துக்கள் ஏற்பட, வழி பிறக்கின்றது. எனவே ஒவ்வொரு நீரிழிவு நோயாளிக்கும், தொடர்ச்சியாகத் தகுந்த சிகிச்சை அளித்து வரவேண்டும்.

முதலாவது நீரிழிவினால், மயக்கம் வந்து, பின்னர் மீண்டும் பிரக்ஞை ஏற்படக் கூடும். தசைநார்களிலுள்ள இன்சுலினின் அளவு, மிகவும் குறைவுபடும் போது, மூளையிலுள்ள கணங்களும், பிற கணங்களும் தங்களுடைய சாதாரண அலுவல்களைச் செய்யவும் இயலாமற் போய் விடுகின்றது. தோன்றிய சில மணி நேரத்திற்குள்ளேயே, "நீரிழிவு மயக்கம்" மரணத்திற்கு நோயாளியை உட்படுத்திவிட்டாலும்விடலாம்.

இரண்டாவது சிக்கல்:- சீரான சிகிச்சை பெறாத நோயாளிகளின் இரத்தக் குழாய்கள், படிப்படியாகச் சிதைவுபட்ட நிலையை அடைந்து விடுகின்றன. இந்தச் சிக்கல், குழந்தைப்பருவத்திலேயே நீரிழிவு தோன்றி இருந்தால், மிக ஆபத்தான நிலையை அடையும்-நாடி இறுக்கம் அடையும் போது உண்டாகும் நிலையைப் போலவே, இதுவும் இருக்கும். ஆனால் சற்று இள வயதிலேயே இந்தக் குணம் காணலாம்.

### பாதங்கள் பாதிக்கப் பெறுதல்

பெரிய நாடிகளும், சிறிய இரத்தக் குழாய்களும் இதனால் பாதிக்கப் படலாம். இருதயத்திற்கும், கால்களுக்கும்,கைகளுக்கும் இரத்தத்தை எடுத்துச் செல்லும் பெரிய குழாய்களுமே, சாதாரணமாகப் பாதிக்கப்படுகின்றன. கால்களிலிருக்கும் இரத்தக் குழாய்கள் சீர்கெட்டுப் போகும் போது, கால்களுக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைவுபடுகின்றது. எனவே, போஷணையும் கால்களுக்குச் சரியாகப் போய்ச் சேருவதில்லை.பாதங்கள் குளிர்ச்சி அடைகின்றன. சருமத்தில் உட்கூச்செறிவு ஏற்படுகின்றது. தொற்றுநோய்கள்,அத்தகைய நோயாளியை விரைவில் பற்றிக் கொள்கின்றன. சருமத்தில் வெடிப்பு ஏற்படுமானால், அது குணமாக வெகு காலம் பிடிக்கும். சில வேளைகளில், சீழ் பிடித்த புண்கள் கூடப் பாதங்களில் தோன்றலாம். பின்னும் நிலைமை மோசமாகப் போகுமானால், தசைநார்கள் செத்துப் போகின்றன. அப்பொழுது அந்த உறுப்பை வெட்டி எடுத்து விட வேண்டியதாகும்.

## மருத்துவ விளக்கம்

### இருதயத் தாக்கு தோன்றுதல்

இருதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாய்கள் பாதிக்கப்படுமானால், இருதயத் தாக்கு நேரிடும் வாய்ப்பு அதிகமாகும். இந்தக் குழாய்களின் மூலமாகப் போதிய அளவு இரத்தம் செல்லுவது தடைப்படுமானால் இதனால் பராமரிக்கப் பெறும் இருதயத்திலுள்ள குறிப்பிட்ட அந்தப் பகுதி தன் வேலையைச் செய்ய இயலாத நிலைக்கு வந்து விடுகின்றது. இந்த வகையிலும், நோயாளிக்கு ஆபத்து தான்.

### கண்களும் சிறுநீரகங்களும் பாதிக்கப் பெறுதல்

கண்களோடும் சிறுநீரகங்களோடும் இணைக்கப்பட்டுள்ள சிறிய இரத்தக்குழாய்கள், மிகச் சாதாரணமாகப் பாதிக்கப்படுகின்றன. கண்களிலுள்ள சிறிய சிறிய இரத்தக் குழாய்கள் வெடிப்பதால், கண்களில் இரத்தக் கசிவு ஏற்படலாம். அதற்கேற்ப கண்ணில் குருட்டுத்தன்மை பரவும். சிறுநீரகங்களிலுள்ள சிறிய இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படும் போது,அவை நாளடைவில் செயலற்றுப்போகின்றன. சாதாரணமாகச் சிறுநீரகங்கள் வலுவடைய உறுப்புக்கள் தாம் தேவைஏற்படும் போது, அதிகமாக உழைக்கும் ஆற்றலை, அவை பெற்றிருக்கின்றன. எனவே, இவற்றைச் சேர்ந்த சிறிய இரத்தக் குழாய்கள் சிதைவடைந்த பின்னும், சிறுநீரகங்கள் தொடர்ந்து வேலை செய்கின்றன - அதாவது, இரத்தத்திலிருந்து கழிவுப் பொருட்களை, எப்பொழுதும் போலவே பிரித்தெடுத்து வெளியே அனுப்புகின்றன.

ஆனால் தசைகள் சிதைந்து போகும் காலம் வரும். அப்பொழுது, சிறுநீரகங்களால் செயல்பட முடியாத நிலைவரும், அப்பொழுது சிறுநீரகங்களால் செயல்பட முடியாத நிலைவரும் அப்பொழுது கழிவுப் பொருட்கள் இரத்தத்திலேயே தங்கிப போகும். இதன் விளைவால், நோய் முற்றிய நிலை ஏற்படும் - அதன் பின்னர் அகால மரணமே விளையும்.

### நரம்பு மண்டலத்தைப் பாதித்தல்

தகுந்த சிகிச்சை முறை கையாளப்படாவிட்டால், நரம்பு மண்டலம் பாதிக்கப்படும். இரவில், உடம்பில் வலி எடுக்கும்; உடல் முழுவதிலும் பிரதிக் கிரியைகள், நன் முறையில் இருக்கமாட்டா. உடல் எங்கும், கூச்ச உணர்வும், மந்த உணர்ச்சியும், ஏற்படலாம் - கால்களில் மாத்திரம் அல்ல, வைகளிலும் கூட.

நீரிழிவின் இன்னொரு விளைவு சரும நோய்கள். இவை அதிகரித்து, கட்டிகளும், பிளவைகளும், தோன்றுவதற்குக் காரணம், பொதுவாகச் சருமத்தில் இவற்றை எதிர்க்கும் சக்தியின் அளவு குறைந்தது தான். இதுவன்றித் தசைகளின் குணமாகும் தன்மையும் குறைவுபடுகின்றது.

### இன்சுலின் கண்டுபிடிப்பும் அதன் பலனும்

இன்சுலின் 1921 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது, இதை உபயோகித்து, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம், உடல் தானே தயாரித்துக் கொள்ள முடியாத, அல்லது போதுமான அளவில் தயாரித்துக் கொள்ள முடியாத இன்சுலின் என்ற பொருளை நாம் உடலில் அளவின்படியே உட்செலுத்துகிறோம் அவ்வளவு தான்!

### முன்னேற்றம்

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதில், நவீன மருத்துவ நிபுணர் இன்னும் கொஞ்சம் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். மருந்துகளை, வாய் வழியாக உட்கொள்ளலாம். இன்சுலின் ஊசி மூலமாகவே, இரத்தத்திற்குள்ளே செலுத்தவேண்டும் .வாய் வழியாக விழுங்கப் பெறும் இந்த மாத்திரைகள், உடலின் தேவையை முழுவதும் பூர்த்தி செய்வதில்லை. ஆனால், வியாதி ஓர் அளவிலேயே இருந்தால் இது பயன்படலாம். முதிர்ந்தவர்களுக்கு நீரிழிவு நோய்

**டாக்டர் ஜே.துரைராஜ**

தோன்றினால், இந்த வகையான மருந்து மிகவும் பயன்தரும். ஆனால், இளம் பிள்ளைகளுக்கு, நீரிழிவு வருமானால், அவர்களுக்கு ஊசியின் மூலம் மருந்து இரத்தத்தினுள் புகட்டப்படவேண்டும். பெரியவர்கள், தங்கள் உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டு, உடல் பருத்துவிடாமல் கண்காணிக்க வேண்டும்.

மானிடவர்க்கத்திற்கு மிகுந்த அவல நிலையை உண்டு பண்ணுகின்ற முக்கிய நோய்களில் நீரிழிவும் ஒன்று. இதைக் கட்டுப்படுத்தும் வழி வகைகள், நமக்குத் தெரியும் தவிர, நோயாளியும், மருத்துவரும் பூரணமாக ஒத்துழைத்தாலே நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்த நோயை முழுவதுவதுமாக வெல்ல முடியுமா? 'முடியாது' என்று தான் தற்போது சொல்ல வேண்டும். ஆனால், கட்டுப்படுத்த முடியுமா? ஆம், நிச்சயமாக, நீரிழிவைக் கட்டுப்படுத்த முடியும்.

## மாநகர பணியாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(மட்டக்களப்பு)

சம்மாந்துறையில் நடைபெற்ற மகாபொல கண்காட்சிக்குச் சென்று விட்டு வீதிரும்பிக் கொண்டிருந்தவர் மீது நேற்று அதிகாலை 1.00 மணிக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை மாநகர சபை வருமான மேற்பார்வையாளராகப் பணிபுரியும் அப்துல் ஜப்பார் சமீம் என்பவர் மீதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் இச்சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ந-121)

## பிரியாவிடை வைபவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் செயலாளர் செ.சரவணபவ வவுனியா நகர சபைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதினை முன்னிட்டு இவருக்கு சபையின் ஊழியர் நலன் புரிச்சங்கத்தினரால் சபை மண்டபத்தில் பிரியாவிடை வைபவம் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை மு.ப. 11.00 மணியளவில் சபை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி கு. ஆறுமுகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ந-29)

## கலந்துரையாடல்

(இருபாலை)

நிக்கொட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் இருபாலை கிழக்கு வசந்த புரத்தில் கிராமிய மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இத் திட்டத்தினை மேற்கொள்ளும் முகமாக வசந்தபுர மக்களின் தேவைகளை இனங்காணும் வகையிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை இருபாலை தெற்கு கந்தவேள் பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலினை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், கோப்பாய் பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தவுள்ளன. (ந-84,74)

## வீதி சேதம் பயணிகள் சிரமம்

(கோண்டாவில்)

கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்டதும் கல்வியங்காடு கிராம சேவகர் பிரிவில் அடங்குவதுமான விளையாட்டு அரங்கு வீதி சுமார் 20 வருடங்களுக்கு மேலாகவிருந்து செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாக இருந்து வருகிறது.

இவ் வீதியால் விவசாய நிலங்களுக்குச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன், இவ் வீதி போக்குவரத்துக்கு பெரும் இடையூராக உள்ளது.

கோப்பாய் தெற்கு முழுமதி சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்கள் இது பற்றிப் பல தடவைகள் பிரதேச சபைக்குத் தெரியப்படுத்தியிருந்தும், எதுவித பயனும் கிடைக்கவில்லையென்று அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-50)

## நல்லைச் சூழலில் இன்று

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நடாத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கில் பதினோராம் நாளான இன்று மேரி சரோஜா ஜெஸ்டினின் இசைக்கச்சேரி இடம் பெறவுள்ளது.

அத்துடன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் நாவலர் மணி மண்டபத்தில் தினமும் இரவு 7.00மணிக்கு நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ் நிகழ்வுகளில் இன்று, சைவப்புலவர் கந்த சத்தியதாஸன் தலைமையில் 'வாழ்க்கையில் சைவம்' எனும் தலைப்பில் சுழலும் சொற்போர் இடம்பெறவுள்ளது.

ஆசிரிய வாழ்வில் சைவம் தொடர்பாக சைவப்புலவர் என்.ரி.தரனும், மாணவ வாழ்வில் சைவம் தொடர்பாக தெய்வத் தமிழ்ச் செம்மல் ச.நவநீதனும், குடும்ப வாழ்வில் சைவம் தொடர்பாக செ.கவி தரனும், வாணிபத்தில் சைவம் தொடர்பாக த.பிரதீப்பும், சமுதாய வாழ்வில் சைவம் தொடர் பாக க.அகாஷும் சொற்போராடவுள்ளனர்.

மாலை 6 மணிக்கு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்று வரும் கான கதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கம்பராமாயண தெய்வீக இசைப்பேருரைத் தொடரில் இன்று, 'தாடகை வதம்' என்ற தலைப்பில் இசைப் பேருரை இடம் பெறவுள்ளது. (ந-7)

## எண்ணெய் அகழ்வுப்பணிகள் டிசம்பரில் ஆரம்பம்

(மன்னார்)

நாளாந்தம் எரிபொருட்களின் விலை சர்வதேச ரீதியில் அதிகரித்து வருவதையடுத்து, மன்னார் குடாவில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக அக்ழ்வுப் பணிகளின் இயக்குநர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில், 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட அகழ்வு ஆய்வு நடவடிக்கைகள், இந்த வருடம் டிசம்பர் மாதத்திலேயே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த அகழ்வு நடவடிக்கைகள் மன்னார் முதல் களனி வரை 9 பிரிவுகளாக நோர்வே நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-க)

## ஏழு இலட்சம் பேருக்கு விரைவில் தொ.பேசி இணைப்பு

(கொழும்பு)

தொலைபேசி இணைப்புக்களைப் பெறுவதற்காகக் காத்திருக்கும் 7 இலட்சம் பேருக்கு விரைவில் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாக தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜயரட்ண தெரிவித்தார்.

இதற்காக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துடன் மேலும் 7 தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

இவற்றுடன் 3 கம்பியல்லாத தொலைத்தொடர்பு சேவையை வழங்கும் நிறுவனங்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

தூர இடங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு இச் சேவை விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-ப)

## மிதிவெடிகள் அகற்றப்பட்ட நிலப்பரப்பு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை உப்புக்குளப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள 4ஆயிரத்து475 சதுரக் கிலோமீற்றர் நிலம் 'ஹலோ ட்ரெஸ்ற்' நிறுவனத்தினால் மிதிவெடியகற்றப்பட்டு கடந்த 24ஆம் திகதி அரியாலை ஜே/96 கிராம சேவையாளரிடம் கையளிக்கப்பட்டது.

உப்புக்குளப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ளதால் அப்பகுதியில் மக்கள் நடமாட்டத்தைக் கருத்தில் கொண்டே கடந்த மே மாதம் 31 ஆம் திகதி முதல் அங்கு மிதிவெடியகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இம் மாதம் 24ஆம் திகதி அப்பகுதியில் மிதிவெடியகற்றும் பணிகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டு அந்நிலபபரப்பு உரிய கிராம சேவையாளரிடம் கையளிக்கப்பட்டது.

இப் பகுதியில் இருந்து 462(பி-4) வகையிலான பாகிஸதான் மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன. (ந-19)

# சர்வதேசத்தின் கழுகுப் பார்வையிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் தப்பிவிடமுடியாது

## சமாதானத்தை ஏற்படுத்தியே ஆகவேண்டும் என்கிறார் பசீர் எம்.பி.

(கொழும்பு)

ஜே.வி.பி. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிபோல் செயற்படுகின்றது. இந்தக் கட்சியை எதிர்த்தால் சொந்த நலன்கள் இல்லாமல் போய்விடும் என்பதினால் முழு அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் வேண்டா வெறுப்பாக அமைச்சுப் பதவிகளை ஏற்று நடக்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பசீர் சேகுதாவுத்.

சாய்ந்தமருதில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

அமைச்சர்கள் இவ்வாறு நடந்து கொள்வதற்கு முக்கிய காரணம தமது பதவிகளை தக்கவைப்பதற்காகவே இவ்வாறு இவர்கள ஏனோ தானோ என நடப்பதானது, எதிர்க்கட்சியின் செயற்பாடுகளை ஒத்ததாகவே காணப்படுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இவ்வாறு பாராளுமன்றில் அனைவரும் எதிர்க்கட்சியாகவே செயற்படுகின்றமையினால் நாட்டில் புதிய அரசியல் சூழ்நிலை ஒன்று தோற்றம்பெற்றுள்ளது.

அதுதுடன், பாராளுமன்றில் இடம்பெறும் சில சம்பவங்களை மக்கள் தொலைக்கட்சி ஊடாகப் பார்த்து நகைக்கின்றனர்.

ஆளுங்கட்சியின் பித்தலாட்ட நிகழ்வுகளைப் பார்க்கும் மக்கள், இவர்கள் அரசியல்வாதிகளா? அல்லது பித்தலாட்டக்காரர்களா என ஐயப்படுகின்றனர்.

இதனால், குறிப்பாக சிறுபான்மையினமக்கள் அரசின் செயற்பாடுகள குறித்து பெரும் அதிருப்தி அடைவதுடன், இவர்கள் சமாதானத்தை ஏற்படுத்துவார்களா? எனவும் சந்தேகிக்கின்றனர்.

எது எவ்வாறாயினும், சர்வதேச சமூகத்தின் கழுகுப் பார்வையில் இருந்து அரசு தப்பிவிட முடியாது. நாட்டில் நிரந்தர சமாதானத்தை எப்படியாவது ஏற்படுத்தியேயாக வேண்டும்.

அவ்வாறு அரசு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தித் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் போது அபிவிருத்தியை மட்டும் சிறுபான்மையினர் எதிர்பார்க்கக்கூடாது. உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை பெறமுயல வேண்டும்.

குறிப்பாக முஸ்லிம் மக்கள் இதில் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றார். (ந-க)

## மிதிவெடிகள் அகற்றப்படவுள்ளன

(திருநெல்வேலி)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுழிபுரம் பாணாவெட்டிப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணிகள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் ஏற்கனவே மிதிவெடிகள் அகற்றப்பட்ட போதும் பொதுமக்கள் மிதிவெடியில் சிக்கிப் பாதிக்கப்படும் நிலைமையுள்ளது.

(ந-க,43)

## அரச ஊழியருக்கு சம்பள உயர்வு பிரதமர் மகிந்த உறுதிமொழி

(கொழும்பு)

அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வுகள் வழங்கப்படுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நெருக்கடிகளையும் அரசியல் இழுபறிகளையும் எதிர்கொண்டுள்ள போதிலும், மக்களின் நலன் கருதிச் செய்ய வேண்டிய செயற்றிட்டங்களையும் நிவாரணங்களையும் அரசு வழங்கி வருகிறது.

அரசியல் பேதங்களை மறந்து அரசின் அபிவிருத்தி முயற்சிகளுக்குச் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதுவே நாட்டின் எதிர்காலத்தை ஒலிமயமாக்கும் எனப் பிரதமர் மேலும் தெரிவித்தார். (ந-ப)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் சிறுபபிட்டி ஜனசக்தி கிராமத்தில் சமகால அரசியல் நிலைமை தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த சனிக்கிழமை இரவு 7.30ற்கு நடைபெற்றது.

ஈகைச்சுடரை 2ஆம் லெப்டினன்ட் குமணனின் தாயார் லஷ்மியும், சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணனும் ஏற்றிவைத்தனர்.

ஜனசக்தி சனசமூக நிலையத் தலைவர் தர்மராசாவின் தலைமையுரையை அடுத்து கருத்துரைகள் இடம்பெற்றன. வலி-கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சிவகடாட்சம், சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். (ந-7)

## முஸ்லிம் சமூகத்திற்கென புதிய தீர்வுத் திட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளுக்கு மாற்றீடான ஒரு யோசனையினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்துள்ளதாக அக்கட்சியின் செயலாளர் ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

ஹொங்ஹொங் பல்கலைக்கழகமொன்றின் அரசியல் அமைப்புத்துறைப் பேராசிரியரான ஜயஸ் ஜகானி என்பவரின் ஆலோசனைப்படியே இந்தத் தீர்வுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவர் தென்னாபிரிக்க போன்ற நாடுகளின் அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் கலந்துகொண்டவர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும, விடுதலைப் புலிகளும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும போது முஸ்லிம் காங்கிரஸ் அந்தப் பேச்சுவார்த்தைகளில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தினர் தொடர்பான எந்தவொரு முடிவும் தமது ஒப்புதல்கள் இல்லாமல் எட்டப்படமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-121)

## மனித உரிமை செயலகத்தின் மாதாந்த சந்திப்பு


மனித உரிமைகள் செயலகத்தின் மாதாந்த சந்திப்பு நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள மனித உரிமைகள் செயலகத்தில், மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண. பிதா கருணாரத்தினம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.


இந்த சந்திப்பின் போது தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப்பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட இரண்டு பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகள், வடக்கு - கிழக்கின் தமிழர் தாயகப் பகுதியிலுள்ள பாடசாலைகளின் கல்விநிலை மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை, தமிழீழ கல்விப் பேரவையினரின் முறைப்பாடுகள் என்பன தொடர்பாக இங்கு விரிவாக வாதிக்கப்பட்டுள்ளன.


இதேவேளை, பாராளுமன்றத்திலும் அமைச்சர்கள் மத்தியில் இப்பிரச்சினைகள் விவாதிக் கப்படவுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (ந-121)

# 28வது ஒலிம்பிக் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள்





பதினாறு நாட்களின் பின் ஒலிம்பிக் தீபம் இறக்கலின் போது.



நெருப்பைக் கடந்து நடனம் ஆடும் மங்கையர்



நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். - குறள்

# வலம்புரி

## அநாதையாகி நிற்கும் யாழ். திறந்த பல்கலைக்கழகம்

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து வடபுலத்தில் இயங்காமல் ...ந்த அமைப்புக்களும் ஓரளவு இயங்க ...ம்பித்துள்ளன.

அந்த அமைப்புகளின் தலைவர்கள், பொறுப் ...ா அதிகாரிகள் இயன்றவரை தமது ஆளு ...த்திறனை வெளிப்படுத்தி தத்தம் அமைப் ...களின் செயற்பாட்டிற்கு வழி தேடியுள்ளனர்.

...வ் வகையில் யாழ்ப்பாணத்தில் யுத்த சூழ் ...லையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் ...சிய கல்வியற் கல்லூரி, தொழிநுட்பக் கல் ...ியில் இருந்து பிரிக்கப்பட்ட உயர் தொழில் ... நிறுவனம் போன்றவற்றை இதற்கு உதா ...ாகக் குறிப்பிடலாம்.

...தனையோ சிக்கல்கள், வளப்பற்றாக் ...ள் மத்தியிலும் உரிய கற்கைநெறி ...ஒழுங்காக நடத்துவதில் அந்த நிறு ...கள் வெற்றி கண்டுவருகின்றன.

...ால், யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக ...ும் யாழ். திறந்த பல்கலைக்கழகத்தின் ந... மையானது கழுதை தேய்ந்து கட்டெறும் ப... கதையாக உள்ளது.

...தசிய பல்கலைக் கழகங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்ட திறந்த பல்கலைக் கழகமானது, பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களும், தொழில் புரிவோரும் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

நாட்டில் பிராந்திய ரீதியில் இயங்கும் திறந்த பல்கலைக்கழகங்களில் கல்வி டிப்ளோமா, கல்விமானி, விஞ்ஞானமானி, ஆங்கில டிப்ளோமா, இதழியல் டிப்ளோமா, முகாமைத்துவ டிப்ளோமா, சட்டம் போன்ற பல்வேறு கற்கை நெறிகளில் பட்டப்படிப்பு இடம்பெறுகின்றன. எனினும், யாழ் பிராந்திய திறந்த பல்கலைக் கழகம் கற்கை நெறிகளை கைவிட்டு மிக வேகமாக செயலிழந்து வருகின்றது.

யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தில் எத்தனையோ கற்கை நெறிகள் போதிக்கப்பட்ட போதிலும், அவை தற்போது நடைமுறையில் இல்லாமல் போய்விட்டன.

போதிய வசதிகள் இல்லை, ஆளணி இல்லை என்று கூறி குறிப்பிட்ட கற்கை நெறிகள் விலக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றபோதிலும், இத்தகைய விலக்கல்களுக்கு யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் திறமையற்ற நிர்வாகமே ...ம் எனலாம்.

...பாணப் பல்கலைக்கழகம் கலைப்பட் ...ல் மருத்துவப் பட்டம் வரையிலான ...ளை நடத்தும்போது, யாழ். தேசிய ...பற் கல்லூரி இலங்கையில் உள்ள ... கல்லூரிகளுக்கு ஈடாக சில இடங் ...ன்மாதிரியாக நடக்கும்போது, யாழ். ... பல்கலைக்கழகம் மட்டும் வசதி ..., ஆளணியில்லை என்று கூறி கற்கை ...ளைக் கைவிடுவது யாழ்ப்பாண மாண ...க்கு செய்யும் பெரும் துரோகம் ஆகும்.

...வே, யாழ்ப்பாணத்தில் மெல்லச் செத் ... கொண்டிருக்கும் யாழ். பிராந்திய திறந்த ...கலைக்கழகத்திற்கு உயிர்ப்பிச்சை வழங்க ...ாழ்ப்பாண மாணவர்களின் கல்வியில் அக்கறை ...காண்ட புத்திஜீவிகள் முன்வரவேண்டும்.

இதற்கு வசதியாக யாழ். திறந்த பல்கலைக் கழக நிர்வாகம் மாற்றியமைக்கப்படுவது அவசியமாகும்.

திறந்த பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்படும் கற்கைநெறிகள் பற்றி அறிவதற்காக யாழ். பிராந்திய அலுவலகத்திற்குச் சென்றால் நிறுவனம் பேய்வாழும் சுடலை போன்று காட்சி தந்தால் எப்படி அந்த அமைப்பை இயக்க முடியும்?

## அரசு - புலிகளை உடன்படச் செய்யவே சர்வதேசம் தந்திரோபாயத்தை கையாள்கிறது

### சண்டேலீடருக்குச் அனுர பிரியதர்சன யாப்பா செவ்வி

(கொழும்பு)

அடிப்படை விவகாரங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு இறுதியான தீர்வொன்று எடுக்கப்படும் வரைக்கும் பேச்சுக்கள் தொடர்ந்து செல்லும் எனும் நிலையில் இருக்குமாயின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த பிரேரணைகளின் அடிப்படையில் பேச்சுக்களை தொடங்கலாம். இந்த வகையில் தான் முன்னர் எம்மால் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது என்பதை ஒப்புக்கொள்ள முடியும். அந்த நிலைப்பாட்டில் இருந்து நாம் மாறவுமில்லை. இவ்வாறு பெருந்தோட்ட துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் தெரிவித்துள்ளார்.

நாம் போர்நிறுத்த உடன்பாட்டிற்கும் பேச்சுக்கள் மூலமான தீர்வுக்கும் உடன்பாடுள்ளவர்கள். ஆனால் யுத்தநிறுத்த மீறல்கள் இடம்பெறாமாட்டாதென்பதை கண்காணிப்புகுழுவினர் உறுதிசெய்வதுடன் இறுதித் தீர்வுக்கான பிரேரணைகளை புலிகள் முன்வைத்தல் வேண்டும். இவ்விவகாரத்தில் நாம் வெவ்வேறு கொள்கைகளைப பேசுகிறோம் என்று கூறப்படுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. சமாதானத்திற்கு உடன்பாடான திசையில் தான் பலரது கருத்துக்களும் உள்ளன. இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்குத் தான் ஆதரவு தருவதாக ஜனாதிபதி ஒருபோதும் கூறியதில்லை.

ஒவ்வொருவரும் பேசும் போது வெவ்வேறு விதமான கருத்துகளை கூறுவதுண்டுதான். ஆயினும் இறுதி யில் கட்சியே தீர்க்கமானமுடிவொன்றை எடுக்கும்.

ஜே.வி.பி. யுடன் நாம் பெருமளவு விடயங்களில் உடன்பாடு கண்டுள்ளோம். இனப்பிரச்சினைத் தீர்வில் மட்டும் வெவ்வேறு பார்வை உண்டு. ஆயினும் இறுதியில் மக்கள் எடுக்கும் தீர்மானத்திற்கு இருதரப்பும் மதிப்பளிப்பது என்றும் உடன்பட்டிருக்கிறோம். இதனால் இன்று ஜே.வி.பி. வேறுபட்டு நின்றாலும், ஏதோ ஒரு கட்டத்தில் நாம் ஒரு குரலில் பேச முடியும் என்று நம்புகிறோம்.

அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும அழுத்தம் கொடுத்து உடன்பட வைப்பதற்கு சமாதான அனுசரணையாளர்கள் தம் நிதியுதவியை நிறுத்துவதென்ற தநதிரோபாயங்களைப் பயன்படுத்துவதாக இருக்கலாம். ஆனால் இவ்வகைப் பிரச்சினையை ஒரே நாளல் தீர்த்துவிட முடியாது என்பதே எனது கருத்தாகும்.

நோர்வே அனுசரணையாளர்களின் பங்கு பணிகள் பற்றி தென்னிலங்கையில் வரவேற்பு இல்லை. அவர்களின் பணி சிரமமானதுதான். அவர்கள் எம்முடன பேசி ஏதோ ஒருவகை உடன்பாட்டுக்கு வரமுடியுமாயினும் புலிகளுடன் அவ்வாறு செய்யமுடியாது. போர்நிறுத்த உடன்பாடு மீறப்படும் போது அவர்கள் புலிகளுடன் கண்டிப்புடன் நடநது கொண்டிருக்கவேண்டும். ஆனால் அவர்களோ அவ்வாறு நடக்கவில்லை எனவும் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

(ந-6)

## ஐ.தே.க. ஆட்சியில் ஆரம்பித்த படுகொலைகள் இன்னமும் தொடர்ந்த வண்ணமுள்ளன

### ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

யானை - புலி ஒப்பந்தத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்கப் போவதாகக் கூறி பாராளுமன்றத்தைக் கலைத்து ஆட்சிப்பீடமேறிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்திலும் படுகொலைகள் இடம்பெற்று வருவதாக ஜாதிக ஹெல உறுமய குற்றஞ் சாட்டியுள்ளது.

புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் வழங்கி வந்த நபர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்பிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கண்டித்து புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளபோதும் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்றது போன்றே இக்காலத்திலும் இவ்வாறான படுகொலை நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ந-121)

## நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த புதிய நிபந்தனை விதிக்கிறார் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் பாரிய குற்றச் செயல்களை முற்றாகத் தடுத்து நிறுத்துவதென்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றதோர் விடயமென பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பை பலப்படுத்துவதில் மாத்திரம் இத்தகைய குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது கடினமான விடயமாகும். குறிப்பாக இராணுவ ஒற்றர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களைத் தடுப்பதற்குப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதில் மாத்திரம் பயனில்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு -கிழக்கு பிரதேசங்களிலிருந்து வெளியேறுகின்ற மற்றும் அந்தப் பிரதேசங்களுக்குச் செல்பவர்களை குறிப்பிட்ட நபர் என்று அடையாளம் காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறிப்பிட்ட நபர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சில சரத்துத்துகளை உள்ளடக்குவது பொருத்தமானது.

இதற்கு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி தத்தமது யோசனைகளை யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்வது இன்றைய காலகட்டத்தில் முக்கியமான விடயமாகும்.

இதனைக் குறுகிய காலத்தில் செய்யமுடியாது போய்விட்டாலும், இது குறித்து அரசாங்கம் உரிய கவனம் செலுத்துவத அவசியமாகும்.

இத்தகைய குற்றச் செயல்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுக்குச் சார்பானவர்களே ஈடுபட்டுவருகின்றனர். ஆனாலும் கொழும்பு பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ந-8)

## ஆனந்தபுரம் கிராமத்திற்கு 'நியாப்' பல்வேறு உதவிகள்

(இருபாலை)

இருபாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள வறுமைப்பட்ட மக்களைக் கொண்ட ஆனந்த புரக் கிராமத்திற்கு நியாப் பல்வேறுபட்ட உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது.

வறுமைப்பட்டோர் மற்றும் விதவைகளுக்கும் நியாப் திட்டத்தின் கீழ் சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 15 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. 18 ஆயிரம் பெறுமதியா்ன பசுமாடு தலா 15 ஆயிரம் பெறுமதியுடைய தையல் இயந்திரங்கள், கோழிகள் என்பன இச் சுழற்சி முறைக் கடனில் வழங்கப்பட்டுள்ளன.

பொதுக்கட்டடம் ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. 40X50 அடி நீளமான இக் கட்டடம் 5 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆனந்தபுரம் கிராமத்தில் 28 லட்சம் ரூபா செலவில் செம்மணிக்குளமும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது

அண்மையில் தமிழீழ மாணவர் ஒன்றியத்தினரும் இக் கிராமத்தினை நேரில் சென்று பார்வையிட்டுத் தரவுகளைச் சேகரித்துக் சென்றுள்ளனர்.

(ந-84)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீங்கள் காண்கின்ற எல்லா பொருட்களும் வெறும் கனவுகள். அது இப்போது உங்களுக்குத் தெரிகிறது. பழைய லட்சியவாதிகள் மட்டுல்ல தற்கால இயற்பியல் அறிஞர்களும் நாம் காண்பது ஒளியைத்தான், அதிர்வுகளின் வேறுபாட்டால்தான் வேறுமாற்றங்கள் ஏற்படுகின்றன என்று சொல்கின்றார்கள்.

சுவாமி விவேகானந்தர்

# ஒலிம்பிக் மரதன் ஓட்ட வீரரை பார்வையாளர் தாக்கினார்!

(எதென்ஸ்)

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின் இறுதி நிகழ்ச்சியாக அமைந்த ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் தாக்குதலுக்கு உள்ளான பிரேஸில் வீரர் வென்றலீ டிலீமாவிற்கு விசேட ஒலிம்பிக் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

வரலாற்றுப் பெருமைமிக்க மரதனோஸ் நகரிலிருந்து ஆரம்பமான இம் மரதன் ஓட்டப் போட்டியில் முன்னிலை வகித்துக் கொண்டிருந்த பிரேஸில் வீரர் வென்றலீ டிலீமா போட்டியின் 35 ஆவது கிலோமீற்றர் தூரத்தில் வைத்து பார்வையாளர் ஒருவரால் தாக்கப்பட்டார். இதனால் அவர் தனது முன்னிலையை இழக்க நேரிட்டதுடன் வெண்கலப்பதக்கத்தையே பெற நேரிட்டது.

ஒலிம்பிக் போட்டிகளின் போது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்படும் வீரர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஒலிம்பிக் ஞானத் தந்தை பியேரே குபேற்றின் பதக்கம் சர்வதேச ஒலிம்பிக் குழுவால் இவருக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. (121)

# கனடா றொரன்ரோ விபத்தில் இரு இலங்கைத் தமிழர் பலி

கனடாவின் றொறன்ரோவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இரண்டு தமிழ் இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 11.45 மணியளவில் றொரன்ரோவில் தமிழர்கள் வாழும் ஸ்காபுரோப் பகுதியில் இந்த வீதி விபத்து இடம்பெற்றுள்ளது. வாகன ஓட்டுநரான நகுலேஸ்வரன் கந்தசாமி (வயது 24) மற்றும் பயணியான பொன்னுத்துரை நேசகுமார் (வயது 25) ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியாகினர். (ச)

## இடைக்கால நிர்வாக யோசனைக்கு....

யாலங்கள் வரை நீடித்தது.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் வடக்கு கிழக்கு மாவட்டங்களின் அரசியல்துறைப் பொறுப்பாளர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பை அடுத்து சு.ப. தமிழ்ச்செல்வன் செய்தியாளர் மத்தியில் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுடனான நேற்றைய சந்திப்பு எமக்கு மிகவும் திருப்தியளிக்கக்கூடியதாக இருந்தது. தமிழர் தாயகத்திற்கு எதிராகவும், தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பாகவும் தவறான பரப்புரைகளும், விமர்சனங்களும் தென்னிலங்கையில் செய்யப்பட்டுவருவதனால் அவற்றை முறியடிக்கும் வகையில் அவற்றுக்கான சரியான விளக்கத்தை சகல மட்டத்திலும் முன்னெடுப்பதற்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் உறுதிபூண்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளும் அவர்களுடன் இணைந்து சர்வதேச சமூகத்திற்கும் மற்றும் சகல தரப்பினருக்கும் எமது நிலைப்பாடுகளை தெரிவிப்பதற்கு தீவிரமாக செயற்படுவதென்றும் நாம் உறுதிபூண்டுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலைபரம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளோம். யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு கிழக்கில் ஆயுதக் குழுக்கள் வசமுள்ள ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்றும், அவர்கள் ஆயுதங்களுடன் வடக்கு கிழக்கில் செயற்படுவது தடைசெய்யப்பட்டு, அவர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்பதும் ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனால் அதனை மீறி இன்று அவர்கள் செயற்பட்டுவிட்டமையே இன்றைய கொலைகளுக்கு காரணமாகும்.

இன்று நடைபெற்றுவரும் கொலைகள் நிறுத்தப்படவேண்டுமானால் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்ட நடைமுறைகளை பேணி நடப்பதுதான் பொருத்தமானது ஆகும் என்பதை அரசு உணரவேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களை அவர்களது வாழ்விடங்களுக்கு போகவிடாது அவர்கள் கடுமையான நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர். இதற்கு உடனடித் தீர்வுகாண்பதற்கு சகல மட்டத்திலும் ஏற்புடைய ஏற்பாடுகளை சகலரும் மேற்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருப்பதாக சு.ப.தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-121)


## கணனி இயக்குநர் தேவை

PageMaker, CorelDraw, Photoshop ஆகிய துறையில் தேர்ச்சி பெற்ற ஆண், பெண் இருபாலாரும் 01.09.2004 அன்று காலை 10.00 மணிக்கு நேரில் தொடர்புகொள்ளவும்

முகவரி: சதீஸ்
15/2 முருகேசனார் ஒழுங்கை
நல்லூர் (முத்திரைச் சந்திக்கருகாமை)
யாழ்ப்பாணம்

(C/434)





## கௌரவிப்பு வைபவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை முன்னாள் மிருதங்க விரிவுரையாளரும், இலங்கையில் நீண்டகாலம் வாழ்ந்து மிருதங்கக் கலையில் சிறந்த சேவையாற்றி, சிறந்த கலைஞர்கள் பலரை உருவாக்கி, அவர்களை உலக நாடுகள் வியக்கும் வண்ணம் பெருமையடையச் செய்த

உயர்திரு சிதம்பரம் ஏ.எஸ்.இராமநாதன் அவர்களும்

அவரது புத்திரர் சங்கீத பூஷணம் ஆர்.யோகராஜன் அவர்களும்

தாயகம் சென்று 20 ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணம் வருகை தருகின்றார்கள். அவர்களைக் கௌரவிக்கும் வைபவம் 02.09.2004 வியாழக்கிழமை இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையில் நடைபெறவிருப்பதால், அவர்களைக் கௌரவிக்க விரும்பும் மாணவர்கள், நண்பர்கள், இசை ஆர்வலர்கள் 375, நாவலர் வீதியிலுள்ள எனது இல்லத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ்.மகேந்திரன்
மிருதங்க விரிவுரையாளர்

T.P- 077 6047770 (C/433)


# தமிழ்த் தேசியத்தை வலுப்படுத் விழிப்பூட்டல் குழுக்கள் அமைப்

## தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் முடிவ

(கிளிநொச்சி)

தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நான்கு விசேட செயற்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விபரங்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே இக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

நாடாளுமன்ற செயற்பாட்டுக் குழு, தமிழ்த்தேசிய விழிப்பூட்டல் குழு, தென்பகுதி சமூகத்தவருக்கான விழிப்பூட்டல் குழு மற்றும் சர்வதேச இராஜதந்திர செயற்பாட்டுக்குழு ஆகிய குழுக்களே அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதான இக் குழு முதற்கட்டமாக தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயற்பட ... ளது.

இதன்படி இக் குழுவினர் ... வரும் 11 ஆம் திகதி தொட... தொடர்ந்து மூன்று நாட்கள் ... கோணமலை மற்றும் ம... பகுதிகளில் தமது விழி... நடவடிக்கைகளை மே... ளவுள்ளனர். இதேவே... டோபர் மாதம் இக்குழு... டக்களப்பு மற்றும் அ... மாவட்டங்களுக்கும் செ... பகுதி மக்களை சந்தித்து... ரையாடவுள்ளனர்.

## கூட்டுறவுதின விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும், அதன் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் 82 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழா இன்று காலை 10 மணிக்கு கொத்தணியின் கலையரங்கு மண்டபத்தில் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் விஜிதரனும், கௌரவ விருந்தினராக பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் சி. ஐயாத்துரையும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கூட்டுறவு தின விழாவினை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கல், பணியாளர் கௌரவிப்பு, கூட்டுறவுதின விழா சிறப்பு மலர் வெளியீடு என்பனவும் இடம்பெறவுள்ளன. (ம)

## அன்ரன்...

பின் புலனாய்வுப் பிரிவினரின் ஏற்பாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதியிடம் இவர்கள் வலியுறுத்துவார்கள் என தெரியவருகின்றது. (க)

## கண்காணிப்புக்...

தளபதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இராணுவம், விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினரையும் மீண்டும் நேரடிச் சந்திப்புக்கு இணங்க வைத்தபின், விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறை பொறுப்பாளருடனான நேரடிச் சந்திப்புக்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான முன்னோடி சந்திப்பாக இன்றைய சந்திப்பு அமைகிறது என கண்காணிப்புக்குழுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது வெற்றியளிக்கும்பட்சத்தில் இந்த நேரடிச் சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## புலிகள்...

ரும் வடக்கு கிழக்கில் தகவல் தருவோர் சுட்டுக் கொல்லப்பட்டே வந்தனர். அச்சுறுத்தல் காரணமாகவும், பின்னர் ஏற்பட்ட நிலைமைகள் காரணமாகவும் கருணா ஆதரவாளர்களும் கொழும்பு பாதுகாப்பானது என்று கருதி வந்தனர். இதனைப் புலிகள் பயன்படுத்தி தாமும் கொழும்புக்கு வந்தனர். போர்நிறுத்த ஒப்பந்தம் இதனை எதிர்பார்க்கவில்லை. இதனால் இக் கொலைகளைக் கட்டுப்படுத்தவேண்டுமாயின் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் நடமாடும் சுதந்திரத்தில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். (த-6)

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்பல

## 2 மாத கால அவகாசம் வழங்க

## ரணவிராஜா தெரிவி

நாடு முழுவதும் உள்ள சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு விசேட திட்டம் ஒன்றை அரசாங்கம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்போவதாக பொதுமக்கள் பாதுகாப்பு நீதி மற்றும் சமாதான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு இரண்டு மாதகால அவகாசம் வழங்கப்படவுள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் அவரவர் வசிக்கும் பொலிஸ் நிலையங்களிலோ அல்லது மாவட்டச் செயலகங்களிலோ அவற்றை ஒப்படைக்கவேண்டும்.

இதற்கான கா... னது எதிர்வரும் ஒ... லாம் திகதிமுதல் ... டுத்தப்படவுள்ளது. ... சட்டவிரோத ஆயு... படைப்பதற்கு கட... வழங்கப்பட்ட கால... தின்போது ஆயிரத்... 00 தங்கள் ஒப்படைக்கப்...

ஐக்கிய நாடுகள் சபை... பிரகடனத்திற்கு அமைவாக ச... ரோத ஆயுதங்களைப் பயன்... துவதை தடுக்கும் பொறு... ஆணைக்குழு ஒன்றை விரை... நியமிப்பதற்கும் அமைச்ச... யின் அங்கீகாரம் கிடைத்... பதாகவும் திலக் ரணவி... மேலும் தெரிவித்தார்.

## வடகடல் தொழிற்சாலையிலிருந்து

# இடைநிறுத்தப்பட்ட 11 பேரு மீண்டும் வேலையில் இணை

(யாழ்ப்பாணம்)

2003 ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்ட வடகடல் தொழிற்சாலை ஊழியர்கள் 11 பேரும் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேற்படி தொழிற்சாலையில் கடமையில் இருந்தபோது 11 தொழிலாளர்களும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட 11 பேரும் சென்ற வருடம் யாழ். மனிதஉரிமைகள் ஆணை... வில் இதுகுறித்து முறை... செய்திருந்தனர்.

இம்முறைப்பாட்டை அடு... யாழ். மனிதஉரிமை ஆணைக்... மேற்கொண்ட நடவடிக்கையி... தொழிற்சாலையிலிருந்து இ... நிறுத்தப்பட்ட பிரஸ்தாப ... லாளர்கள் 11 பேரும் 2004 ஆண்டு 7 ஆம் மாதம் மீ... வேலையில் இணைத்துக்... ளப்பட்டுள்ளனர்.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



தனங்கிளப்பு சாவகச்சே...
நிரந்தர முகவரியாகவு...
வீதி சாவகச்சேரியை ...
முகவரியாகவும் கொ...
பகீரதன் தீபா தம்ப...
செல்வப்பு...

தீபச்...

தனது முதலாவது பிறந்த நாளை 31/08/2004 இன்று செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவர் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.

கண்டிவீதி, சாவகச்சேரி
ஸ்.ரி.விமலதாஸ் (சின்னச்சித்தப்ப...


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்...